# புதுவிதி
PUTHU VITHI

விலை 20/=


பக்கங்கள் 24

01 ஜூன் 2019

புதுமை : 03 விதி : 156


'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'







# இந்திய விசுவாசத்தில் இந்தியர்களைவிட ஓங்கி நிற்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.



சிங்கள மயமாக்கம் நோக்கிய முஸ்லிம் அரசியல்



மீண்டும் வருமா...!



கட்டடக் கலையின் ஊடாக ஜனநாயகத்தை வெளிப்படுத்தல்



தேடும் கண்கள்

# உலகம் எப்படி அழியும்...!

உலகம் அழியப்போகிறது. அழிந்துகொண்டிருக்கிறது. இல்லை, அழிந்தேவிட்டது.

இந்தக் கட்டுரையை நீங்கள் படிக்கத் தொடங்கும்போது பூமியின் ஏதாவதொரு மூலையில், உலகம் அழிந்து கொண்டிருப்பதன் விளைவுகளை உங்களைப் போன்ற ஏதேனும் ஒரு மனிதர் அனுபவித்துக்கொண்டிருப்பார். நாளை அது நீங்களாகவும் இருக்கலாம்...

1972 ஆம் ஆண்டில் ஒரு கணனி மென்பொருள் வடிவமைக்கப்பட்டது. அதன் பெயர் வேர்ள்ட் 1 (World1). கிளப் ஒவ் ரோம் என்ற அமைப்பைச் சேர்ந்த விஞ்ஞானிகள், தொழிலதிபர்கள், அரசாங்க அதிகாரிகள் என்று பலரும் உறுப்பினர்களாக இருந்தனர். அவர்கள் உலகின் பிரச்சினைகளைச் சரி செய்வதில் கவனம் செலுத்தியிருந்தார்கள். அந்த அமைப்பைச் சேர்ந்தவர்கள் உலகம் எந்த அளவுக்கு வளர்ந்து கொண்டிருக்கிறது. அவர்கள் முன்னெடுத்த வளர்ச்சிக் கோட்பாட்டை உலகம் எந்த எல்லைவரை தாக்குப்பிடிக்கும் போன்றவற்றைத் தெரிந்துகொள்ள முயன்றார்கள். வேர்ள்ட் 1 என்ற எதிர்காலத்தைக் கணிக்கக்கூடிய அந்த மென்பொருள் ஜே ஃபொரஸ்டர் (Jay Forrester) என்பவரால் வடிவமைக்கப்பட்டது.

மனித நாகரிகத்தின் எதிர்கால தலையெழுத்தை கணிக்க வேண்டியதுதான் அந்த மென்பொருளுக்குக் கொடுக்கப்பட்ட வேலை. மனித நாகரிகத்தின் எதிர்காலத்தைக் கணிப்பதற்காக அது பல காரணிகளைக் கணக்கில் எடுத்துக் கொண்டது. மாசுபாடு, மக்கள் தொகை அதிகரித்தல், இயற்கை வளங்களின் இருப்பு, சர்வதேச அளவில் மக்களின் வாழ்வாதாரம் மற்றும் வாழ்வியல் தரம் உட்பட பசி, வறுமை என்று பலவும் அந்தப் பட்டியலில் முக்கியமான காரணிகளாக இருந்தன.

வேர்ள்ட் 1 கணிப்பது 100 வீதம் துல்லியமாக இருக்காது. அது எடுத்துக்கொண்ட காரணிகளை அப்போதைய நிகழ்காலத்தோடு ஒப்பிட்டு எதிர்காலத்தில் எப்படியிருக்கும் என்பதைப் புரிய வைக்க வரைகட்டப் பகுப்பாய்வை (Graph analysis) உருவாக்கியது. காலநிலை மாற்றத்தை அப்போது கணக்கில் எடுக்கவில்லை. வேர்ள்ட் 1 எடுத்துக் கொண்ட காரணிகள் அனைத்தின் நிலையும் எதிர்காலத்தில் அதாவது, இன்றைய காலகட்டத்தில் இறங்கு முகமாக இருக்குமென்று அந்த வரைகட்டப் பகுப்பாய்வு கூறியது. பூமியில் மனித இனத்தின் பயணப்பாதை எதிர்காலத்தில் அவ்வளவு பாதுகாப்பானதாக இருக்காது என்பதை வேர்ள்ட் 1 மென்பொருளின் கணிப்பு கூறியது. இது வெறும் மென்பொருள்தான் அது கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதென்று பலரும் வாதிட்டார்கள். அவர்கள் முன்வைத்த வளர்ச்சிக் கோட்பாடு மீது இப்படியொரு ஆபத்தான குற்றச்சாட்டுகளை யாரும் வைப்பதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆனால், துரதிர்ஷ்டவசமாக அவர்கள் கணித்தது தவறாகிவிட்டது. வேர்ள்ட் 1 கணித்தது சரியாகிவிட்டது. ஆம், அவர்களின் வளர்ச்சிக் கோட்பாடு பூமியை அழிவுப் பாதைக்கு இட்டுச் சென்றுகொண்டிருக்கிறது.

1972ஆம் ஆண்டின் வேர்ள்ட் 1 கூறியதன்படி, 2020 ஆம் ஆண்டுதான் அந்தப் பேரழிவுக்கான தொடக்கமாக இருக்குமென்று கணிக்கப்பட்டது. அப்படி ஏற்படாமல் தவிர்ப்பதற்காக நாம் எதையும் செய்யவில்லை என்றால் பூமியில் மனித நாகரிகத்தின் தரம் பூஜ்ஜியத்தைத் தொடும் வரை இந்தப் பேரழிவின் வீரியம் ஓயாது என்று அது கணித்திருந்தது. மாசுபாடு மிகத்



தீவிரமான பிரச்னையாக உருவெடுக்கும், அது மனிதர்களைக் கொல்லும் அளவுக்கு ஆபத்தானதாக மாறி நிற்கும் என்று அது கணித்தது. ஆம், இன்று மாசுபாடு உலகளவில் பலரையும் கொன்றுகொண்டிருக்கிறது. இந்த நிலை 2040-க்குப் பிறகு மேலும் மோசமாகும் என்று கூறப்பட்டது. அதுவும் உலகின் இப்போதைய மக்கள் தொகையை 1900 ஆம் ஆண்டில் எந்த அளவுக்கு இருந்ததோ அந்த அளவுக்கே குறைத்துவிடும் என்று கணிக்கப்பட்டது. 2050 ஆம் ஆண்டிலிருந்து நாகரிகம் என்று நாம் இப்போது எதை நினைக்கிறோமோ அது இருக்குமா என்பதே சந்தேகம்தான் என்றும் வேர்ள்ட் 1 கூறியது.

இந்தக் கணிப்புகளை மையமாக வைத்து "வளர்ச்சிக்கான எல்லை (The Limits to Growth)" என்றொரு புத்தகத்தை க்ளப் ஒவ் ரோம் அமைப்பு வெளியிட்டது. அதன்பிறகு, வேர்ள்ட் 3 என்றொரு மென்பொருள் டொனெல்லா, ரென்னிஸ் மீடோஸ் மற்றும் அவர்களின் குழுவால் உருவாக்கப்பட்டது. இந்த முறை, அவர்கள் மக்கள் தொகை, தொழிற்புரட்சி, இயற்கை வளங்களின் நுகர்வு, உணவு உற்பத்தி என்று மேலும் சில காரணிகளையும் சேர்த்துக்கொண்டார்கள். 'வளர்ச்சிக்கான எல்லை' புத்தகம் இதே வேகத்தில் போனால் மனித நாகரிகம் 2072 ஆம் ஆண்டு அழிந்துவிடும் என்று எச்சரித்தது. அந்த நூலின் மீதான விமர்சனங்கள் மிகக் கடுமையாக வந்தன.

'கணினி தொழில்நுட்பம் கூறுவது வெறும் பிதற்றல்தான். அதை உருவாக்கியவர்கள் மனம்போன போக்கில் தங்கள் அனுமானங்களைக் கூறியுள்ளார்கள். இதை வைத்துக்கொண்டு எதையும் முடிவு செய்ய முடியாது. இந்த நூல் வெறுமையான தவறாக வழிநடத்தக்கூடிய ஒன்று" என்று மிகக் கடுமையாக விமர்சித்தது நியூயோர்க் ரைம்ஸ். அப்போது அந்தக் கணினி மனித நாகரிகம் எப்படியும் 2040 ஆம் ஆண்டின்போது அழிந்துவிடும் அல்லது குறைந்தபட்சம் அதன் அழிவு தொடங்கிவிடும் என்று கணித்திருந்தது.

உண்மையைச் சொல்லப்போனால், பூமியின் ஆறாவது பேரழிவு தொடங்கிவிட்டது. இதைப் பல அறிவியலாளர்களும் ஏற்றுக்கொள்ளவே செய்கிறார்கள். அதோடு இந்த ஆறாவது பேரழிவில் அழியப்போகும் உயிரினம் மனிதனாக இருக்கலாமென்றும் கூறப்படுகிறது. இவை அனைத்துமே அன்று வோர்ல்டு1 கூறியதிலிருந்து சிறிதும் பிசகாமல் நமக்குச் சமகாலத்தில் கிடைத்துள்ள தகவல்கள். அது வடிவமைக்கப்பட்டு 50 ஆண்டுகள் கழித்து மீண்டும் அதன் முடிவுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன. "50 ஆண்டுகள் கடந்துவிட்டன. தரவுகள் மாறியிருக்கும். நில அமைப்புகள், மக்களின் வாழ்வியல் என்று அனைத்துமே மாறியிருக்கும். அவற்றையெல்லாம் வைத்து மீண்டுமொரு ஆய்வு செய்து பார்ப்போமே" என்று முடிவுசெய்தார் ஒருவர்.

2014 ஆம் ஆண்டு கிரஹம் டர்னர் (Graham Turner) என்ற ஒருவர் மீண்டும் வேர்ள்ட் 1 கூறிய உலக அழிவு குறித்த விஷயங்களை ஆய்வுசெய்யத் தொடங்கினார். ஐக்கிய நாடுகள், அமெரிக்காவின் தேசிய கடலியல் மற்றும் வளிமண்டல ஆய்வகம் போன்றவற்றிலிருந்து தரவுகளைச் சேகரித்தார். வேர்ல்ட் 1 மற்றும் வோர்ல்டு 3 மென்பொருள்கள் கூறியவற்றை இவற்றில் சேகரித்த தரவுகளோடு ஒப்பிட்டுப் பகுப்பாய்வு செய்தார்.

அவை அப்போது கூறியவையும் அவர் சேகரித்த தரவுகளும் பெரும்பாலும் ஒத்துப்போவது அவருக்கு ஆச்சரியத்தையும் அதிர்ச்சியையும் அளித்தது. வேர்ல்ட் 3 மென்பொருளின் தரவுகள் நாம் 2072 ஆம் ஆண்டு அழிந்துவிடுமென்று கூறியிருந்தது. டர்னர் செய்த ஆய்வின் முடிவில் அவர் இப்படிக் குறிப்பிட்டார்,

"நம் அழிவு தொடங்கிவிட்டது என்று சொல்வதைவிட, மனித இனத்தின் அழிவுப் பாதையுடைய கூர்முனையில் நாம் நின்றிருக்கிறோம் என்று சொல்வதே சரியாக இருக்கும்!"

வேர்ள்ட் 3 கூறியது சரியா அல்லது டர்னர் கூறுவது சரியா என்று நாம் ஆராய்ந்தால் ஒன்று மட்டும் தெளிவாகப் புரிகிறது. நிலைமை இப்படியே போனால் நம் அழிவு மட்டும் நிச்சயம்.

அவர்களுடைய ஆய்வு உலகப் பொருளாதாரம், சுற்றுச்சூழல், மக்கள் தொகை இவை அனைத்துமே நிச்சயமாகப் பாதிக்கப்படும் என்று கூறவில்லை. அதேசமயம், 1973ஆம் ஆண்டின் கணிப்புகள் அப்படியே நடக்குமென்றும் நாம் முடிவுக்கு வரவில்லை. ஆனால், ஏற்படப்போகும் சூழலியல் பேரழிவு அவை அனைத்துக்குமே வித்திடும். அதனால், உலகம் முழுவதும் போர்கள் வெடிக்கும். அதேசமயம் அதைச் சரிசெய்யத் தகுதியுள்ள உண்மையான சூழலியல் தலைமை உருவாகலாம். அது நம் பயணத்தைத் திசைதிருப்பலாம். நாம் மீண்டும் உயிர்த்தெழுந்து வரலாம். எதிர்காலத்தில் என்ன நடக்க வேண்டுமென்பது இப்போது நாம் எடுக்கப்போகும் முடிவில்தான் இருக்கிறது. இன்னமும் அரசுகள் சுற்றுச்சூழல் பிரச்னைகளுக்குக் காலநிலை அவசரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் இருக்குமானால் அந்த முடிவுக்கான விளைவுகளை அனுபவிக்கப்போவது நாமாகத்தானிருக்கும்.


"எங்கள் ஆய்வு முடிவுகள் யாரையும் பயமுறுத்துவதற்காக அல்ல. அது ஓர் எச்சரிக்கை மணி மட்டுமே. நம் வளர்ச்சிக் கோட்பாடு 2100 ஆம் ஆண்டில் பேரழிவைக் கொண்டுவரும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். ஆனால், இதே வேகத்தில் நாம் சென்றால் அந்தப் பேரழிவு வேர்ள்ட் 1 சொல்வதுபோல் 2040 ஆம் ஆண்டுக்குள்ளாகவே வந்தாலும் வரலாம். எப்போதும் பூமி நாம் எதிர்பார்ப்பதுபோல் செயல்படுவதில்லை. அதன் இயல்புக்குத்தான் நாம் செயல்பட வேண்டும். இனியாவது அதை உணர்ந்து செயல்படுவோம். இதை நாம் ஏற்க மறுப்போமானால் விளைவுகளையும் அனுபவிப்போம்" - கிரஹம் டர்னர்.

உலகம் அழியப் போகிறதென்று சொன்னோம். இப்போது அழிந்துகொண்டிருக்கிறது என்றும் சொல்கிறோம். உலக நாடுகளும் அரசுகளும் இதை முக்கியப் பிரச்சினையாகக் கருதி தங்கள் தவறுகளைச் சரிசெய்ய முயலவில்லை என்றால், டர்னர் சொல்வதுபோல் நாளை உலகம் அழிந்துவிட்டதென்று சொல்ல நாம் இருக்கமாட்டோம்.

புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 | 01 ஜுன் 2019 | விதி : 156



## நீதிக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் மீண்டும் ஒரு மோதல்

நீதிமன்றத்தை அவமதித்தமை உட்பட 3 வழக்குகளில் மேல் நீதிமன்றம் பொது பல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரருக்கு 19 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தது. மூன்று குற்றங்களுக்கான தண்டனைகளையும் ஒரே நேரத்தில் அனுபவிப்பது என்ற அடிப்படையில் 6 வருடங்கள் கடூழியச் சிறைத்தண்டனை அனுபவிக்கவேண்டியவரானார்.

இந்த நிலையில் 6 மாதங்கள் அவர் தண்டனை அனுபவித்து முடிக்காமலேயே ஜனாதிபதி ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் அவர் விடுவிக்கப்பட்டார்.

நீதிமன்ற அவமதிப்புக்காக தண்டனை அனுவிக்கும் ஒருவரை ஜனாதிபதி பொதுமன்னிப்பில் விடுவிப்பதுவும் ஒரு விதத்தில் நீதிமன்ற அவமதிப்பெனவே கூறப்பட்டது.

அவ்வகையில் நாட்டின் சிரேஷ்ட சட்டத்தரணிகள் ஞானசார தேரர் பொதுமன்னிப்பில் விடுவிக்கப்பட்டது சட்டப்படி செல்லுபடியாகாதெனத் தீர்ப்பளிக்கும்படி கோரி உயர் நீதிமன்றத்தில் மனு சமர்ப்பித்துள்ளனர்.

இதன் காரணமாக மீண்டும் ஒரு முறை நீதித்துறையும், ஜனாதிபதியின் நிறைவேற்று அதிகாரமும் மோதும் நிலை ஏற்பட்டுள்ளதெனக் கூறப்படுகிறது.

ஏற்கனவே ஜனாதிபதி நாடாளுமன்றத்தை நிறைவேற்று அதிகாரத்தை பாவித்துக் கலைத்தமையை செல்லுபடியாகாதென நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது குறிப்பிடத்தக்கது.

விரைவில் ஜனாதிபதித் தேர்தல் வரவிருப்பதால் ஞானசாரதேரர் விடயத்தில் ஜனாதிபதியும் விட்டுக்கொடுக்கமாட்டார் என்றே நம்பப்படுகிறது.

**வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் உண்டு**

# பொலநறுவவில் கால்பதிக்க மங்கள சமரவீரவுக்குத் தடை

இலங்கையின் நிதியமைச்சர் மங்கள சமரவீர பொலநறுவை மாவடத்திற்குள் கால் பதிக்க அனுமதிக்கப்படமாட்டார் என பொலநறுவ ரஜமகாவிகாரையின் பீடாதிபதி கந்தேகம தீவம்சவ தேரர் கண்டிப்பான அறிவித்தல் விடுத்துள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீர அவர்கள் அண்மையில் இலங்கை ஒரு பௌத்த நாடு என்று சொல்வது தவறு எனவும் இலங்கையில் வாழும் சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் என அனைவருக்கும் இந்த நாடு உரிமையானதெனவும் தெரிவித்திருந்தார்.

ஆனால் தேரர் இலங்கை ஒரு பௌத்த நாடு எனவும் அது பௌத்தர்களுக்கு மட்டுமே உரியதெனவும் அதில் வேறு எவருக்கும் உரிமையில்லை என்றும் தெரிவித்ததுடன் மங்கள சமரவீரவை அப்படிக் கூறியமையால் பொலன்நறுவையில் கால் பதிக்க அனுமதிக்கப் போவதில்லையெனவும் தெரிவித்தார்.

இலங்கையின் அரசியல் சாசனத்தில் பௌத்தத்திற்கு முதலிடம் எனவும் ஏனையோரும் தங்கள் மதங்களை எவ்வித இடையூறு மின்றி பின்பற்ற முடியுமெனவும் கூறுகிறது. இலங்கை ஒரு பௌத்த நாடு என எவரும் கூறவில்லை.

அரசியல் சாசனத்தை மாற்றும் அதிகாரத்தை அவருக்கு யாராவது வழங்கியுள்ளார்களா என்பது பற்றி எதுவும் தெரியவில்லை. ஆனால் அரசியல் சாசனத்தை 2/3 பெரும்பான்மையால் மட்டுமே மாற்றமுடியும்.



**தடி எடுத்தவனெல்லாம் சண்டைக்காரன் என்றால் சட்டமும் நீதியும் குட்டிச்சுவர்தான்**

# இந்தியாவில் மழை வேண்டி நாதஸ்வரக் கச்சேரி

தென்னிந்தியாவின் திருவண்ணாமலை அருணாசலலேஸ்வரர் கோயிலில் மழை பெய்ய வேண்டுமெனக் கோரி பலநாதஸ்வர, தவில் கலைஞர்கள் ஒன்று கூடி ஒரே நேரத்தில் கச்சேரி நடத்தினர்.


பல கலைஞர்கள் ஒன்று சேர்ந்து வருணபகவானை வேண்டி வருண ராகத்தை ஆலாபனை செய்தால் வருண பகவான் மனமிரங்கி மழை பெய்விப்பார் என்பது அப்பகுதி மக்களின் நம்பிக்கை.

கடந்த 2 வருடங்களாக மழை பெய்யாததால் அந்த ஊர்களிலுள்ள குளங்கள், கிணறுகள் அனைத்தும் வற்றிவிட்டன. அனால் அருணாசலலேஸ்வரர் கோயில் தீர்த்தக் குளத்தில் மட்டும் நீர் வற்றவில்லையாம். எனவே வருணராகம் வாசித்தால் நிச்சயம் மழை பெய்யுமென மக்கள் நம்புகின்றனர்.

இலங்கையிலுள்ள இசை மேதையொருவர் வருண ராகத்தைப் போலவே அமிர்தவர்சினி ராகத்தை வாசித்தாலும் மழை பெய்யும் என்றார்.

அப்போது ஒருவர் இலங்கையில் ஜனாதிபதி பதவியேற்பு வைபவத்தின்போது வாசிக்கப் பொருத்தமான ராகம் எதுவெனக் கேட்டார். அதற்கு ஒருவர் எவ்வித தயக்கமும் இன்று முகாரி ராகம் என்றார். முகாரி சோகத்துக்கான ராகமல்லவா எனக் கேட்ட அவர் இலங்கையில் அவர் ஜனாதிபதியாக வந்தாலும் தமிழருக்கு சோகம் தானே என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றால் என்ன ராகம் வாசிக்கவேண்டுமென அவரிடம் யாரும் கேட்கவில்லை.




# கடந்தவார சமூக வலைத்தளங்களில்































புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

## நாட்டுக்கு மட்டுமல்ல இனத்துக்கும் கேடு...!

அரசியல் ரீதியாக சில முடிவுகள் எடுக்கப்படும்போது சில வரலாற்றுத் தவறுகள் நேர்ந்து விடுவதுண்டு. அவ்வாறான வரலாற்றுத் தவறுகளில் ஒன்று முஸ்லிம்களை யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற்றுவது என விடுதலைப் புலிகள் எடுத்த முடிவு. இந்த முடிவு சரி அல்லது பிழை என்ற வாதம் இப்போது வரை முடிவில்லாது தொடர்கிறது - இனியும் முடிவின்றி தொடரலாம். ஆனால், யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேறும்போது பேராசிரியர் நுஃமான் 'நான் யாழ்ப்பாணத்தை விட்டுப் போவது கவலை தான். ஆனால் அதை விடக் கவலை உலகில் இந்த இனம் (தமிழினம்) தனித்துப் போகப் போகிறதே என்பதுதான்", எனக் கூறியிருந்தார். எவ்வளவு தீர்க்க தரிசனமான வார்த்தைகள் அவை என்பதை ஈழத் தமிழினம் சில வருடங்களிலேயே புரிந்து கொண்டது.

பேரினவாத வெறி அதிகரித்து ஆக்கிரமிப்பு - அடக்கியாள முற்படும் மனநிலைகளுடன் தமிழினத்தின் மீது வன்முறைகளையும் போரையும் சிங்கள - பௌத்த பேரினவாதம் கட்டவிழ்த்து விட்டது. அப்போது தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் தமிழ் பேசும் இளைஞர்களாக ஒன்றிணைந்தே எதிர்கொண்டார்கள். காலவோட்டத்தில் இரு இனங்களுக்கும் இடையில் ஒரு சில வேறுபாடுகளும் - சிங்கள தேசத்தின் பிரித்தாளும் தந்திரமும் ஒருங்கு சேர்ந்து இரு இனங்களையும் இரு கூறாக்கியது. பேரினவாதம் விரித்த ஆசை வலையில் சிக்கிய முஸ்லிம் அரசியல்வாதிகள் இரு இனங்களும் மீண்டும் சேராதவாறு பார்த்துக் கொண்டார்கள். இறுதியில் தமிழர்களை அழிக்கும் ஆயுதங்களில் ஒன்றாக முஸ்லிம்களும் மாறிப் போனார்கள்.

ஆனால், இப்போது நிலைமை தலைகீழாகி உள்ளது. அடிப்படைவாதத்தின் பெயரால் சிலர் செய்த தவறுக்கு ஒட்டு மொத்த முஸ்லிம் இனமும் பழிவாங்கப்படுகின்றது. அதற்காக சோதனை நடவடிக்கைகளோ - தேசிய பாதுகாப்பு ஏற்பாடுகளோ தவறு என்று சொல்லிவிட முடியாது. ஆனால், அப்பாவிகளைப் பாதிக்காத எந்த நடவடிக்கைகளும் தவறல்ல என்பதை ஆட்சியாளர்களும் - இராணுவம், பொலிஸார் உணர்ந்துகொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டத்துக்கு செல்லும் முஸ்லிம்கள் ஆனையிறவில் அமைக்கப்பட்டுள்ள சோதனைச் சாவடியில் புறம்புபடுத்தப்பட்டு தனிமைப்படுத்தப்படுகின்றனர். ஏனையவர்கள் அடையாள அட்டையைக் காட்டி தம்மை உறுதிப்படுத்தி சோதனையை முடித்துக் கொண்டு வெளியேறிய பின்னரும், முஸ்லிம்கள் மீது சோதனையுடன் பலமான விசாரணையும் - பதிவும் தொடர்கிறது. விசாரணைகள் அவர்களை ஏதோ பயங்கரவாதிகள் என்ற எண்ணத்துடன் பார்க்கப்படுவதை வெளிப்படுத்துகிறது. முன்னர் எவ்வாறு தமிழர்கள் நடத்தப்பட்டார்களோ அப்படி இப்போது முஸ்லிம்கள் நடத்தப்படுகிறார்கள். இராணுவம் - பொலிஸார் மேற்கொள்ளும் இத்தகைய சோதனை நடவடிக்கையால் பலர் அவ்விடத்தில் கூனிக்குறுகிப் போகிறார்கள். இந்நிலை ஆனையிறவில் மட்டுமல்ல, நாட்டின் பல பகுதிகளிலும் நடப்பவைதான்.

அனைத்து மக்களையும் சமமாகக் கருதி நடத்த வேண்டிய படையினரும் பொலிஸாரும் முன்னர், தமிழர்கள் மீது வெறுப்பை உமிழ்ந்தது போன்று இப்போது முஸ்லிம்கள் மீது வெறுப்பை உமிழந்து பேரிவாதத்தின் இயந்திரங்கள் தாங்கள் என்பதை உறுதி செய்கிறார்கள். தஞ்சம் கோரி வந்தவர்களை தங்கள் பகுதிகளுக்குள் வைத்திருக்காது அவர்களை அலைக்கழிய வைக்கும் இந்த அரசு - நல்லிணக்கத்தையும் - சமாதானத்தையும் வெறுமனே பேச்சில் மட்டுமே கொண்டுள்ள பேரினவாதத்தின் பிரதிநிதிகளாக செயற்படுகின்றது. பேரினவாதிகளை மட்டும் திருப்தி செய்தால் போதுமெனத் தான்தோன்றித் தனமாக நடக்கும் அரசினாலும் அதன் இயந்திரங்களினாலும் சிங்களம் தனித்துப் போய்விடும் நிலை உள்ளது.

இவ்வாறு தனித்துப் போவது, நாட்டுக்கு மட்டுமல்ல, அந்த இனத்துக்கும் - மக்களுக்கும்கூட அது நல்லதல்ல...!

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 53

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

களைப்பில் உறங்கியபோதும் காலை நான்கு மணிக்கு எழுந்து கொண்டோம். ஏற்கனவே அமைக்கப்பட்டிருந்த கூடாரங்களின் முன்பாக எமக்கும் ஒரு கூடாரத்தை தெரிவு செய்து அதன் முன்பு உறங்கியிருந்தோம். வலுவிழந்த மக்களாக, அடுத்து என்ன நடக்குமோ என்ற பீதியுடைய மக்களாக இருந்தாலும் அன்றைய இரவு காட்டை அழித்து உருவாக்கப்பட்ட அந்த முகாமில் தூங்க முடிந்தது. இரவுத்தூக்கம் மனித உடலுக்கு அத்தியவசியமானது. அதிலும் அமைதி நிறைந்த இரவுகள் வரம் நிறைந்தவை.

அதிகாலையை அழகாக்கிய பறவைகளின் ராஜ மொழியில் துன்பங்களை மறக்க முடியும் என உணர முடிந்தது. ஆனாலும் எங்களுக்கு என்ன நடக்கப் போகிறது என்ற கேள்வி மனதைக்குடைந்து கொண்டே இருந்தது. திக்குத்திக்காக குடும்பம் குடும்பமாகப் பரந்து தமக்கென இடம்பிடித்த தறப்பாள் கொட்டகைக்குள் சிலர் பயத்திலே உறங்கியிருந்தனர். வெட்டை வெளியில் நட்சத்திரங்களை எண்ணிக்கொண்டு தூங்கிய நாட்களைப்போல் இன்றைய ஒரு பொழுது கிடைத்திருக்கிறது. ஆனால், நட்சத்திரங்களை எண்ணித் தூங்குமளவு மனம் உற்சாகமாக இருக்கவில்லை. அதிகாலைப்பொழுதில் மிகவும் குளிரான காற்று வீசியது. குழந்தைகளை குளிர் நெருடாமல் போர்வையால் மூடி விட்டேன்.

காட்டுத்தரையில் காயப்பட்ட ஒரு மனிதனின் இந்திரியங்கள் இயங்கு மொழி பேசியது அதிசயமே. போரின் கடைசிக் காலங்களை நினைத்துப் பார்க்கிறேன். போர்ச் சன்னதங்களோடு காமக்களியாட்டங்களும் நிறைந்திருந்தது. இறந்து விடப்போகிறோம் தானே அனுபவிப்பதை அனுபவிக்க வேண்டும் என்ற விரக்தியில் முதலிடம் பிடித்தது காமமே. இதில் பெரும்பாலும் இளையவர்களே தடம் மாறினர். பெரியவர்கள் உணவு தேடலிலும், பாதுகாப்பு நிலைப்படுத்தலிலும் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள பதுங்குகுழிகளும் மறைவிடங்களும் காமக்களியாட்ட இடங்களாக மாறியிருந்தன.

போரின் முடிவு பரியந்தத்தில் இப்படி எல்லாம் நடக்காவிடில் அது போர்க்களமாக இருக்க வாய்ப்பில்லை என்ற அளவிற்கு கடும் சமூகப் பிறழ்வுகள் நடைபெற்றன. கசிப்புக் காய்ச்சினார்கள். கசிப்பு உற்பத்தி கடைசி நாட்களில் குடிகாரர்களுக்கும் புதிய குடிகாரர்களையும் உருவாக்கியது. மிக நெருக்கடியான சூழ்நிலையில் நாளும் பொழுதும் தேடிய உணவுப் பண்டங்களைத் திருடினார்கள். புகையிலையில் மயங்கிக் கிடந்தார்கள். புகைப்பிடிக்கும் சுருட்டு ஒன்று 300 ரூபாவுக்கு விற்பனையானது. அடிபட்டு வாங்கிப் புகைத்தார்கள். ஒரு சுருட்டை வாங்கிப் பிரித்து அதை கொப்பித்தாள்களில் பல துண்டங்களாக சுருட்டி பீடி போலாக்கி ஒன்றை 100 ரூபாவுக்கு விற்றார்கள்.

உணவுத் தட்டுப்பாடு, எண்ணைத் தட்டுப்பாடு, அதற்குள்ளும் கடலை வடை செய்து விற்றார்கள். ஒரு கடலை வடையின் விலை 200 ரூபாவாக இருந்தது. இரண்டு அல்லது மூன்று யப்பான் மீன் (குளத்து மீன்) ஆயிரம் (1000) ரூபாவுக்கு விற்கப்பட்டது. ஆனால், அவை கண்ணில் தெரியும் சில நொடிப்பொழுதுகளில் விற்றுத் தீர்ந்தன. விற்பனையாளனால் விரும்பிக் குறிக்கப்பட்ட விலையில் பொருட்கள் விற்கப்பட்டன. விலை நிர்ணயமோ தர நிர்ணயமோ அங்கு இருக்கவில்லை. மாட்டு இறைச்சி என நாய் இறைச்சியையும் விற்றார்கள். உயர்ந்த சட்டங்களைக் கடைப்பிடித்த மக்கள் கூட்டமா இவர்கள்? என சந்தேகப்படும்படியாகவே நடந்து கொண்டார்கள்.

எல்லோருடைய மனதிலும் சுயநலமே விரிந்து கிடந்தது. தேசியம், தன்னாட்சி, மறுமலர்ச்சி என வாய் கிழியக் கத்திய கூட்டம் உயிர் காக்கவும், பசி தீர்க்கவும் போராடிக்கொண்டிருந்தது. உக்கிரமான பசி மனிதர்களை பாதை மாற்றும் தியாகங்கள் புரட்சியை மறக்கச் செய்யும் என்பதற்கு முள்ளிவாய்க்கால் சாட்சியமானது. உயர்ந்த பண்பாட்டு விழுமியங்களைக்கொண்ட சமூகம் கட்டாக்காலிகளாக மனித ஒழுக்கம் சிதைந்த இடமானது கடைசிப் போர் பூமி. இதனால் முள்ளிவாய்க்கால் மண்ணில் சமூகப் பிறழ்வுகள் அறிமுகமாகின.

வலைஞர்மடத்தில் இருந்த போது ஒரு இளம் தம்பதி. அந்தப்பெண் பட நடிகைகள் போல உடை அணிவாள். சிலவேளை சரமும் சேட்டும் போட்டிருப்பாள். மாலை வேளைகளில் அந்தக் குளத்தடியால் ஒரு உரசல் ஊர்வலம் நடக்கும். அதைப் பார்ப்பதற்கு பல இளசுகளும் வயோதிபங்களும் காத்திருக்கும். தலைவனின் தோளில் தலையை வைத்து தலைவனின் இடுப்பை கட்டிப்பிடித்து விரக தாபமாக அவனது முகத்தையே பார்த்தபடி அவர்கள் நடப்பதை வாய்பிளந்து பார்த்திருந்தோம். படமில்லாத காலத்தில் இப்பிடி படம் காட்டினால் யார்தான் பார்க்க மாட்டார்கள்?


சிறுவயதில் பெற்றோரை இழந்து விடுதியில் வாழ்ந்த என்னைப் போன்றோர்க்கு சமூக கட்டமைப்புகளின் நீட்டு முடக்குகளை கற்றுக்கொள்ள முள்ளிவாய்க்கால் மண் உதவியது. எவ்வளவு சமூகப்பிரச்சனைகள்? உண்மையிலே முப்பது வருடகாலமாக நல்ல தலைவன் கட்டுக்கோப்பான போராளிகளால் கட்டி எழுப்பிய மனிதர்களா இவர்கள்? எத்தனை பிள்ளைகள் மாவீரர்களாக இரத்தப் படையலிட்டு தளைக்க வைத்த சமூகமா இது? ஒரே நொடியில் கருக்கப்பட்ட ஒழுக்க நிலை எப்படி உருவாகிற்று? எல்லைகளும் உயர்ந்தபட்ச கட்டமைப்புகளையும் உடைத்த மனிதர்களாகியது எப்படி?

(சாட்சியம் நீளும்)

# இந்திய விசுவாசத்தில் இந்தியர்களைவிட ஓங்கி நிற்கும் ஈ.பி.ஆர்.எல்.எவ்.

**தயாளன்**







'ஜன கன மன...", என்று பாடாத குறையாக இந்திய விசுவாசம் கொடிகட்டிப் பறக்கிறது வடக்கு. குறிப்பாக 1983 முதல் விடாப்பிடியாக நிற்கிறது இக்கொள்கையில் (?) ஈ.பி.ஆர்.எல்.எவ். இந்தியப் படையினரால் நேரடியாகவும் குறிப்பாக இறுதி யுத்தத்தில் மறைகரமாகவும் நின்று தமிழரின் அழிவுக்கு இந்தியா காரணமாக நின்றது என்பது அனைவருக்கும் தெரிந்திருந்த நிலையிலும், தமது நிலைப்பாட்டில் இருந்து சற்றும் தளரவில்லை இவர்கள்.

உயிர்த்த ஞாயிறு சம்பவத்தின் பின் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்பட்ட ஏதிலிகள் திருப்பி அனுப்பப்பட்ட சம்பவம் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்கள் குறித்து அக்கட்சியின் செயலர் தெரிவித்த கருத்துக்கள் இந்தியாவின் பாதுகாப்புக் குறித்து அவர் எவ்வளவு விசுவாசமாக உள்ளார் என்பதற்கு உதாரணம். அந்தக் காலத்தில் இருந்து ஈழத் தமிழரின் நலனா? இந்தியாவின் பாதுகாப்பா? முக்கியமானது என்ற கேள்விக்கு ஈ.பி.ஆர்.எல். எவ்வின் தெரிவு இரண்டாவதுதான்.

1985 திம்புப் பேச்சுக் காலத்தில் இந்த அமைப்பின் சார்பில் அப்போதைய செயலர் தோழர் கே.பத்மநாபா சிறு நூல் ஒன்றை வெளியிட்டிருந்தார். 'போர் நிறுத்தமும் - பேச்சுவார்த்தையும்" என்ற நூலின் 18 ஆம் பக்கத்தில் அவர் ஒரு முக்கிய கருத்தைப் பதிவு செய்திருந்தார், 'சிலர் இந்தியா தன்னுடைய நலனுக்காகவே தற்காலிக யுத்த நிறுத்தம் - பேச்சு வார்த்தை என்பவை ஈழ விடுதலை அமைப்புக்கள் மீது திணித்துள்ளது. எனவே இந்தியாவை மீறி ஈழ விடுதலைப் போராட்டத்தை கொண்டுபோக வேண்டும் என்று எல்லாம் தெரிந்தவர்கள் போல் கெட்டித்தனமாக வாதிட முற்படுகின்றனர்.

இந்தியா எம் மீது இவ்விட யத்தை திணித்ததா என்பது பற்றிய விளக்கம் ஒருபுறம் இருக்கட்டும்.

மேலே கூறப்பட்டுபோல் இந்தியா தன்னுடைய நலனின் நோக்கில் இருந்து பார்த்தது என்றே வைத்துக் கொள்வோமே, அதில் என்ன தவறு?", என்பது அவரது நிலைப்பாடு. அதாவது இந்தியாவின் நலனே முதன்மையானது. அதற்காக ஈழத் தமிழர் அவர்களது ஆட்டத்துக்கு ஆடியாக வேண்டும் என்பதுதான் அவரது அறிவுறுத்தல்.

1987 இல் யாழ். போதனா வைத்தியசாலை, கொக்குவில் பிரம்படி, சாவகச்சேரி நகரம், வாதரவத்தை, வல்வெட்டித்துறை எனப் பல்வேறு இடங்களில் இந்தியப் படைகள் மேற்கொண்ட பலியெடுப்புகள், பாலியல் வன்புணர்வுகளை இந்தியாவின் பாதுகாப்பு என்ற வகையில் ஆமோதித்தனர் இவர்கள். இந்தியப் படைகள் யுத்த நிறுத்தம் மேற்கொள்ள வேண்டும் என்பது உட்பட சில கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு அமிழர்தகழி அன்னை பூபதி உண்ணா நோன்பிருந்தார். இதற்கு ஆதரவாக ஏறாவூரில் முஸ்லிம் அன்னையர் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். அமைதிப் படைகள் யுத்த நிறுத்தம் செய்யச் சொல்வதா? ஆத்திரமடைந்த ஈ.பி.ஆர். எல்.எவ். தோழர்கள் சந்துரு (ஏறாவூர்), ராஜலிங்கம் (பன்குடாவெளி) முஸ்லிம் அன்னையரின் மண்டைகளை உடைத்தனர். இந்த இருவரும் பின்னாளில் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அமைதிப் படையின் புகழை நிலைநாட்ட தமது தோழர்களையே பலி கொடுத்தது ஈ.பி.ஆர்.எல்.எவ். இறுதி யுத்தத்தின் பின் நடந்த பொதுத் தேர்தலில் (2010) முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலருக்கு வேட்பாளர் நியமனம் வழங்கக்கூடாது என்றும் அறிவுறுத்தல் - அழுத்தம் இந்தியத் தரப்பில் இருந்து மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. பி.பி.ஸி. இது தொடர்பாக அப்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிறேமச்சந்திரனிடம் கேள்வி எழுப்பியது. அதற்கு அவர், 'அரசுடன் ஒத்துழைத்தோர், நாட்டில் நீண்டகாலம் தங்கியிருக்காதோர் தவிர ஏனையோருக்கு இடமளிக்கப்பட்டுள்ளது", எனப் பதிலளித்தார்.

அரசுடன் ஒத்துழைத்தோர் என்ற வகையில் கனகரத்தினம், கிஷோர், செல்வி தங்கேஸ்வரி ஆகியோருக்கு இடமளிக்கப்படாமை ஏற்றுக்கொள்ளக்கூடியதே. வெளிநாடு எனக் குறிப்பிடும்போது, இந்தியாவும் வெளிநாடுதான் சம்பந்தன் ஐயா, மாவை, செல்வம், சுரேஷ் போன்றோரின் கடவுச்சீட்டுக்களையும் கஜேந்திரன், பத்மினி சிதம்பரநாதன் போன்றோரின் கடவுச்சீட்டுக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் யார் கூடுதலான காலம் வெளிநாட்டில் இருந்திருப்பர் என்று தெரிந்திருக்கும். இதைவிட வேடிக்கை என்னவெனில் எந்த நாட்டுக்குமே போயிருக்காத சொலமன் சிறிலினையும் இந்தப் பட்டியிலில் இணைத்து விட்டார் சுரேஷ் பிறேமச்சந்திரன்.

கஜேந்திரன், பத்மினி, சிறில் போன்றோரை தாங்கள் மேய்க்க முடியாது எனக் கருதி இவர்களை வேட்பாளர் பட்டியிலில் இணைக்க வேண்டாம் என இந்தியா வற்புறுத்தியிருக்கலாம். அதனை அப்படியே நிறைவேற்றுவதுதானே இவரது கடமை. அன்று கூட்டமைப்பின் தவறுகளை நியாயப்படுத்திய சுரேஷ் இப்போது தவறுப் பட்டியல் வாசிக்கிறார். உண்மையில் புலிகள் சார்பானோர் அரசியலில் நுழைந்து விடக்கூடாது என்பதுதான் இந்த ஏற்பாடுகளின் மையப்பொருள்.

அரசியல் கைதிகளின் விடயமும் அவ்வாறுதான். 'இவங்கள் கொஞ்சக்காலம் உள்ளுக்கை இருக்கட்டும்: வெளியில வந்தால் அரசியல குழப்பிப் போடுவாங்கள்", என்ற நிலைப்பாடும் இத்தகையதே.


சிவசக்தி ஆனந்தனோ, பிற நாடுகளின் அகதிகளை வடக்கில் உள்வாங்குவதில் நியாயமாகாதாம். 8 மாகாணங்களில் உள்ள பிரதிநிதிகள் இவர்களை ஏற்க மறுத்துள்ள நிலையில், எல்லைக் கிராமங்கள் பறிபோகும் நிலையில் இவ்வாறானவர்களைக் குடியமர்த்துவது பிரச்சினைகளைக் கூர்ப்படையச் செய்யவே வழிவகுக்கும் என இவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். முதலில் ஏதிலிகளின் பிரச்சினை மனிதாபிமான அடிப்படையிலானது என்பதை இவர் புரிய வேண்டும். ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் கொடுமைகள் தாங்காது ஏதிலிகளானோரின் அவலம் அவருக்குத் தெரியாது.

சேமமடுவில் மாவீரர் குமுதனின் குடும்பத்தினரைக் கைது செய்து தனது முகாமுக்கு நடத்திக் கொண்டு போனார் இவர். அவர்கள் செருப்பைக் கொழுவிக் கொண்டு புறப்பட்டபோது, 'செருப்பைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு போக வேண்டும். வெயில் உங்கள் காலில் சுட வேண்டும்.", என்று உத்தரவிட்டவர் இவர். முகாமில் விசாரணைகள், சித்திரவதைகள் முடிந்ததும், 'இனி நீங்கள் சிரட்டை ஏந்தித்தான் சாப்பிட வேண்டும்", எனப் பணித்தவர் இவர். எனவே இவருக்கு ஏதிலிகளின் துன்பம் விளங்காது.

வவுனியாவில் இவரும், மட்டக்களப்பில் இரா.துரைரட்ணமும், யாழ்ப்பாணத்தில் சுரேஷும் எடுத்த முடிவுகளால் உயிரிழந்த கல்வியியளார்கள், கலைஞர்கள் எத்தனை பேர்? எல்லாமே இந்தியாவின் நலனைக் காக்கிறோம் என்ற போர்வையில்தானே மேற்கொள்ளப்பட்டது. மட்டக்களப்பில் இரா. துரைரட்ணத்தால் கைது செய்யப்பட்ட காத்தான்குடியை சேர்ந்த றிபாயா என்ற இளம்பெண் பாலியல் வன்புணர்வின் பின்

(19ஆம் பக்கம் பார்க்க)

கடந்த உயிர்த்த ஞாயிறன்று பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் காரணமாக ஏற்பட்ட 300 வரையான உயிரிழப்புக்களும் ஐநூறுக்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தமையும் நாட்டில் பெரும் அதிர்ச்சியையும் தாளமுடியாத சோகத்தையும் ஏற்படுத்தியிருந்தன. அந்தப் பேரனர்த்தம் இடம்பெற்று ஒரு மாதம் கடந்துவிட்ட நிலையிலும் அதன் தாக்கம் இன்னமும் பல்வேறு விதங்களில் எதிர்விளைவுகளை ஏற்படுத்தி வருகின்றன.



# சிங்கள மயமாக்கம் நோக்கிய முஸ்லிம் அரசியல்

யோகநாராயணன்

அந்தப் பெரும் சோகத்திலிருந்து நாடு இன்னமும் மீளமுடியாது முடங்கிக் கிடக்கும் போதிலும், சில இன, மத வெளியர்களும் அரசியல்வாதிகளும் இதைப் பயன்படுத்திக் கீழ்த்தரமான முறையில் அரசியல் லாபம் பெறும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அதன் ஒரு பகுதி புத்தளம், குருநாகல், கம்பஹா ஆகிய மாவட்டங்களில் வன்முறைகளாக வெடித்துப் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன. எனினும்கூடச் சில அரசியல் நோக்கம் கொண்ட மதவெறியர்களும் அரசியல்வாதிகளும் அப்படியான வன்முறை நடவடிக்கைகளை வலிந்து உருவாக்கும் விதத்தில் செயற்பட்டு வருகின்றனர்.

கடந்த 13 ஆம் திகததி குண்டுவெடிப்புக்கள் இடம்பெறப்போவதாக நாடு முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஆனால், ஞாயிறன்று இரவு குளியாப்பிட்டியில் முஸ்லிம் கடைகள், வீடுகள் தாக்கப்பட்டன. சிலாபத்தில் முஸ்லிம் வர்த்தகர் ஒருவர் முகநூலில் வெளியிட்ட ஒரு தகவல் தொடர்பாகத் தாக்கப்பட்டார். பின்பு அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார். இதையடுத்து சிலாபத்தில் முஸ்லிம்கள் மீதான வன்முறை ஆரம்பித்தது. இவ்வன்முறைகளில் முக்கிய அரசியல்வாதி ஒருவரின் சகோதரரும் ஈடுபட்டார் எனக் கூறப்படுகின்றது.

திங்களன்று வெட்டிபொலவில் கத்திகள், பொல்லுகளுடன் வந்த ஒரு கூட்டம் முஸ்லிம்களின் வர்த்தக நிலையங்களுக்குத் தீ வைத்தது. பொலிஸார் முன்னிலையிலேயே இது இடம்பெற்றபோதும் பெருந்தொகையான வன்முறையாளர்களைக் கட்டுப்படுத்தத் தங்களிடம் ஆளணி போதாதெனக் கூறி எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பின் வெளியிலிருந்து வந்த பொலிஸாரே ஆகாயத்தை நோக்கிச் சுட்டு நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர். அதேவேளையில் சிலாபம் ஆராச்சிகட்டுவவிலிருந்து நூற்றுக்கு மேற்பட்டோர் மோட்டார் சைக்கிள்களில் வந்து வன்முறைகளில் ஈடுபட்டனர். மினுவாங்கொடையில் இராணுவத்தினரும் வன்முறைகளில் ஈடுபட்ட வீடியோ காட்சி இருப்பதாகக் கூறப்படுகின்றது.

இன்னொருபுறம் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வன்முறையில் ஈடுபட்ட சிலரைப் பொலிஸ் நிலையத்திலிருந்து விடுவித்தார் எனக் கூறப்படுகின்றது. அதேவேளையில் திரித்துவ ஹெல உறுமயவின் உபதலைவர் மிதுமானந்த அரவிந்த தாக்குதல்களில் பங்குகொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வன்முறைகள் மூன்று மாவட்டங்களிலும் விசிரிய, கினியாய், ஹெட்டிபொல, குளியாப்பிட்டி, கொட்டாரமுல்ல, தும்மலசூரிய ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு பேரழிவுகள் ஏற்படுத்தப்பட்டன. இவ்வன்முறைகள் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டன என்பது தெளிவாகவே புலப்படுகின்றது. இவற்றுக்குப் பின்னால் வலிமையான அரசியல் பின்னணி கொண்ட சக்திகள் இல்லாமல் இவ்வளவு பேரழிவைப் பல இடங்களில் ஒரே நேரத்தில் ஏற்படுத்தியிருக்க முடியாது.

அப்படியானால் இந்த நாட்டில் முஸ்லிம் மக்களுக்கு எந்தப் பாதுகாப்பும் இல்லையா? என்ற கேள்வியும் எழுகின்றது.

அவற்றுக்கு மேலாக முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகளில் முன்னணிப் பாத்திரம் வகித்த பொதுபல சேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரரும் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பில் இந்த நாட்களிலேயே விடுவிக்கப்பட்டுள்ளார். அவரும் தேசிய தௌபீக் ஜமாத் அமைப்பின் பொதுச் செயலாளர் அப்துல் ராசிக்கை உடனடியாக அரசாங்கம் கைது செய்ய வேண்டும் எனவும் இல்லாவிடில் தாங்கள் பிடிப்போம் எனவும் எச்சரிக்கை செய்துள்ளார். இது முஸ்லிம் மக்களுக்கு மேல் பாய்வதற்கான ஒரு வழியாகவே கருதவேண்டியுள்ளது.

தற்சமயம் முஸ்லிம் மக்களுக்கு பாதுகாப்பற்ற, எப்போது என்ன நடக்கும் என்று தெரியாத அச்சம் நிறைந்த சூழ்நிலையில் வாழும் ஒரு இக்கட்டான, ஆபத்தான நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுத்து வன்முறையாளர்களைக் கைது செய்ய வைத்து முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு வழங்குவது முஸ்லிம் அரசியல்வாதிகளின் உடனடிக் கடமையாகும். உடனடியாகவே ஞானசாரர் சட்டத்தைத் தன் கையில் எடுப்பதைத் தடுக்க அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

ஆனால் அவர்களோ, சிங்களப் பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்தும் வகையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் நடவடிக்கைகளில் இறங்கியுள்ளனர்.

மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா இது பௌத்த சிங்கள மக்கள் பெரும்பான்மையாக வாழும் பௌத்த - சிங்கள நாடு எனவும் இதில் சிறுபான்மையினரான முஸ்லிம்கள் பெரும்பான்மையினருடன் அனுசரித்துப் போக வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அதேவேளையில் சில முஸ்லிம் குழுக்கள் முஸ்லிம்களின் தாய்மொழி சிங்களம் எனச் சட்டத்தின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என அரசாங்கத்திடம் கோரியுள்ளன.

முஸ்லிம் பண்பாட்டலுவல்கள் அமைச்சர் எம்.எம்.ஏ. ஹாலிஸ் வெள்ளிக்கிழமைகளில் பள்ளிவாசல்களில் இடம்பெறும் ஜூம்மா பிரசங்கங்கள் சிங்கள மொழியில் நடத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார். தற்சமயம் கொழும்பு புறநகர் பகுதியிலுள்ள சில பள்ளிவாசல்களில் சிங்களத்தில் ஜூம்மா பிரசங்கம் இடம்பெறுவதாகவும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், அவர் தற்சமயம் புர்கா அணிவது அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடைசெய்யப்பட்ட நிலையில் அதை நிரந்தரமாகத் தடை செய்யச் சட்டம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

அதாவது முஸ்லிம்களின் தாய்மொழி தமிழல்ல சிங்களம் என்பது சட்டபூர்வமாக்கப்படவும் அதனை நடைமுறைப்படுத்துவதைப் பள்ளிவாசல்களிலிருந்தே ஆரம்பிப்பது எனவும் முயற்சிகள் முன்வைக்கப்படுகின்றன. அது மட்டுமின்றி முஸ்லிம்களின் கலாசாரம் தொடர்பான வழமைகளை முஸ்லிம் அல்லாதோரின் விருப்பத்துக்கமைய மாற்றியமைக்கப்படுவது நியாயப்படுத்துகிறது.

புர்கா என்பது பெண்ணடிமைத் தனத்தின் ஒரு சின்னம் என்பதில் சந்தேகமே இல்லை. மறைந்த முன்னாள் முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அஷ்ரபின் மனைவியும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான பேரியல் அஷ்ரப், முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் பெனாசிர் பூட்டோ, பங்களா தேஷ் பிரதமர் பேகம் கலிதா ஷியா என உலகின் முக்கிய முஸ்லிம் பெண்மணிகள் எவருமே புர்காவை அணிவதில்லை.

(09ஆம் பக்கம் பார்க்க)

# தேடும் கண்கள்



**மாம்பழச்சிட்டு** படம் : ஜெயதீஸ்
மட்டக்களப்பு



**அணில்** படம் : மகாலிங்கம் சாந்தமேனன்
முல்லைத்தீவு

புகைப்படங்களை எமக்கு அனுப்ப வேண்டிய முகவரி : puthuvithi@gmail.com



## கரண்டி வாயன்

ஆங்கிலம்: Common Spoonbill,
உயிரியல்: Platalea leucorodia


கரண்டிவாயன் அல்லது துடுப்பு வாயன் என அழைக்கப்படும் இது நாரை இனத்தைச் சேர்ந்தது. இதனை இலகுவாக வேறு பறவைகளில் இருந்து பிரித்தறிய முடியும். வெண்மை நிறமும் கறுப்பு நிற அலகும் கொண்டது. இதன் அலகு கரண்டி போன்று சப்பையாகக் காணப்படும். அலகின் நுனியில் மஞ்சள் புள்ளியும் மார்பில் மஞ்சள் நிறப் பட்டையும் காணப்படும்.

ஆழம் குறைந்த களிமண் அல்லது மணல் நிறைந்த நீர்நிலைகள் அல்லது சதுப்பு நிலங்களில் இவற்றைக் காணலாம். இவை நன்னீரிலும் உப்பு நீரிலும் காணப்படுகின்றன. இவை வலசை செல்லும் பறவைகளாகும்.


இந்தப் பறவைகள் நாரைகள் போலன்றி பறக்கும்போது கழுத்தே நீட்டிக் கொண்டே பறக்கின்றன. கொக்குகளும் இந்த வகையிலேயே பறக்கின்றன. இவை தனியாகவும் கூட்டமாகவும் திரியும் இயல்புடையன.

நீர் புழுக்கள், பூச்சிகள், நத்தை வகைகள், நண்டுகள், அட்டைகள், நாக்குப் பூச்சிகள், தேரைகள், சிறுமீன்களை உணவாகக் கொள்கின்றன.


மரத்தின் கிளைகள், கோரைப் புற்கள், புதர்களுக்குள் கூடுகளை அமைக்கின்றன. இவை தங்கள் கூடுகளை தரையில் இருந்து உயரமாகவே பெரும்பாலும் அமைக்கின்றன.




**கரடி** படம் : சுமுது சொய்ஷா
வைல்ட் ஸ்ரீலங்கா



**புள்ளிமான்** படம் : சிவனேஸ்வரன் சந்திரசேகரன்
இடம் : வில்பத்து



**தீக்காக்கை** படம் : சாஷிக பண்டார
வைல்ட் ஸ்ரீலங்கா



**சிறுத்தை** படம் : அஷான் டி பெர்னாண்டோ
வைல்ட் ஸ்ரீலங்கா

## சிங்களா...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

முந்தானையால் பின் தலையை மூடுவார்கள். இலங்கையிலும் காத்தான்குடி ஏறாவூர், வாழைச்சேனை போன்ற பகுதிகளிலேயே புர்காகவுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றது. பல கிராமங்களில் முஸ்லிம் பெண்கள் சேலை உடுத்தி பின் தலைக்கு முக்காடிட்டுக் கொள்வர். எப்படியிருப்பினும் அது அவர்களின் கலாசாரம் சார்ந்த விடயம். அதுபற்றி முஸ்லிம் பெண்களும், முஸ்லிம் சமூகமுமே விழிப்படைந்து அந்தப் பெண்ணடிமையின் சின்னத்தைக் கைவிட வேண்டும்.

முஸ்லிம்கள் அரபுத் தந்தையருக்கும் சிங்களத் தாய்மாருக்கும் பிறந்த பிள்ளைகளின் வாரிசுகள் என்ற பிரசாரம் சில முஸ்லிம் புத்திஜீவிகளால் ஆரம்பிக்கப்பட்டது. இதில் முன்னின்றவர் நாடாளுமன்ற உறுப்பினரும், மஹிந்த ராஜபக்ஷவின் விசுவாசியுமான அஷ்வர். அவருடன் இணைந்து சில முஸ்லிம் பேராசிரியர்களும் அந்த வாதத்தை வலியுறுத்தினர். அப்படியானால் எப்படி முஸ்லிம்களின் தாய்மொழி தமிழாக உள்ளது? என்பதற்கு எவரும் சரியான விளக்கம் கூறவில்லை.

எட்டாம் நூற்றாண்டில் இலங்கையில் குடியேறிய முஸ்லிம்கள் யாழ்ப்பாணம், மாந்தை (மன்னார்), குதிரைமலை (புத்தளம்), பேருவளை, திருகோணமலை ஆகிய இடங்களில் நிரந்தரமாகக் கொண்டனர் எனவும் அங்கு வசித்த தமிழ்ப் பெண்களைத் திருமணம் செய்ததன் மூலம் பிறந்தவர்களின் வாரிசுகளே இன்றைய முஸ்லிம்கள் என்பதை வரலாற்றறிஞர்கள் ஆதாரங்களுடன் கூறியுள்ளார்கள். அவர்கள் இன்னமும் முஸ்லிம் கிராமங்களில் நிலவும் சீதனம், தாலிகட்டு, கூறைகொடுத்தல், சோறு கொடுத்தல் போன்ற தமிழர்களுக்குரிய சடங்குகளைக் கட்டிக் காக்கின்றனர்.

மௌலானா வம்சத்தவர் மட்டும் அரபுத் தந்தையருக்கும் அரபுத் தாய்மாருக்கும் பிறந்தவர்களின் வாரிசுகள் எனக் கூறப்படுகின்றது. இந்த நிலையில்தான் சில முஸ்லிம் தலைவர்கள் சிங்களப் பேரினவாத சக்திகளைத் திருப்திப்படுத்த முஸ்லிம் மக்களின் தாய்மொழியையே மாற்ற முனைகின்றனர்.

ஈழத்துப் பூதந்தேவனார், சேதிப் புலவர் தொட்டு சோலைக்கிளி, மருதூர்க்கனி வரை தமிழ் இலக்கியத்துக்கு அளப்பரிய பங்காற்றியவர்களை ஏனோ இந்த அடிவருடி அரசியல்வாதிகள் மறந்து விடுகின்றனர்.

கடந்த காலங்களில் அமைச்சர் ரிஷாட் பதியுதீனும், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவும் சிங்களப் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தும் முகமாகத் தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையே முரண்பாடுகளை ஏற்படுத்துவதிலும் முனைப்புடன் செயற்பட்டவர்கள். தற்சமயம் அதே பேரினவாத சக்திகளால் அவர்கள் இலக்கு வைக்கப்பட்டுள்ளனர். இதை ஏனைய முஸ்லிம் தலைமைகளும் உணரும் நாள் வெகு தொலைவில் இல்லை.

# வாரபலன்

### மேடம்

இந்த வாரம் எதிலும் முன்னேற்றமான போக்குத் தென்படும். முயற்சிகள் வெற்றி பெறும். கடன் பளு குறையும். எதிர்பார்த்த தனவரவு உண்டு. உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்ற பல நற்பலன்களைப் பெற்று மகிழ்வீர்கள்.

### துலாம்

உங்களுக்கு இந்த வாரம் தொல்லைகள் குறைந்து நல்ல பலன்கள் ஏற்படும். உத்தியோகத்தில் சிலருக்கு உயர்வு வந்து சேரும். தொழில் செய்பவர்கள், தங்கள் துறையில் வளர்ச்சி காண துடிப்பார்கள். பல வகையிலும் உங்களுக்கு உதவிகளும் ஒத்தாசைகளும் கிடைக்கும்.

### ரிஷபம்

இந்த வாரம் உங்கள் வேகமும், விவேகமும் எதிர்பார்த்தபடி இருக்கும். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்ற நன்மைகளைப் பெற ஏற்ற தருணம் இது. கலைஞர்கள்சிலர் பாராட்டும், பரிசும் பெறுவர். வியாபாரம் ஏற்ற இறக்கமாகத்தான் இருக்கும்.

### விருச்சிகம்

இந்த வாரம் நீங்கள் எதிலும் கவனமாக நடந்து கொள்வது நலம். வீடு, வாகனம் போன்றவை வாங்குவதில் மிகுந்த எச்சரிக்கை தேவை. உத்தியோகஸ்தர்களுக்கு எவ்வித முன்னேற்றமும் ஏற்பட வாய்ப்பில்லை. தொழில் செய்பவர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும்.

### மிதுனம்

இவ்வாரம் உத்தியோகஸ்தர்கள் பல விஷயங்களில் வெற்றி காண்பீர்கள். வருமானங்கள் மிகுதியாகும். தொழில் செய்பவர்கள், தங்களது துறையில் மந்த நிலையைக் கடந்து முன்னேறுவீர்கள். அரசியல் பிரிவினர் அமோகமான நற்பலன்களைப் பெறுவர்.

### தனுசு

உத்தியோகஸ்தர்கள் சிலருக்கு முயற்சித்தாலும் எதுவித நன்மையும் நடக்காது. தொழில் செய்பவர்கள், தங்கள் துறையில் படிப்படியான வளர்ச்சியைக் காண்பார்கள். கலைஞர்களுக்குச் சில சிறு வாய்ப்புகள் மட்டுமே கிடைக்கும். சிலருக்கு அதிர்ஷ்ட வாய்ப்புகள் வந்து சேரும்.

### கடகம்

இந்த வாரம் செயல்திறன் அதிகரிக்கும். புதிய யுக்திகளால் பழைய பிரச்சினைகளை தீர்ப்பீர்கள். தொழில் செய்பவர்கள், தங்களது துறையில் படிப்படியான வளர்ச்சியையும், திருப்திகரமான வருமானத்தையும் பெறுவீர்கள்.

### மகரம்

இந்த வாரம் கூடுமானவரை நன்மையான பலன்களையே எதிர்பார்க்கலாம். உத்தியோகஸ்தர்கள் தமது விஷயங்களில் வெற்றியை அடைவார்கள். தொழில் செய்பவர்கள், தங்கள் துறையில் முன்னேற்றமான நிலையைக் காண்பார்கள். சிலருக்கு வெளியூர்ப் பயணங்கள் அமையலாம்.

### சிம்மம்

இந்த வாரம் நீங்கள் எதிர்பார்த்த சில விஷயங்கள் நல்லபடியாக முடியும். நண்பர்களின் சேர்க்கை மகிழ்ச்சி தரும். உத்தியோகஸ்தர்கள் இடமாற்றம், பதவி உயர்வு போன்றவற்றைப் பெற முயற்சிப்பீர்கள். முன்னேற்றமான சூழ்நிலை தோன்றி மகிழ்ச்சியூட்டும்.

### கும்பம்

இந்த வாரம் உங்களுக்கு சிரமமான சூழ்நிலையே காணப்படும். மனைவிக்கு உடல்நலக் குறைவு, மனக்கசப்புகள் ஏற்பட வாய்ப்புண்டு. உத்தியோகஸ்தர்கள் தமது விஷயங்களில் நற்பலன்களை எதிர்பார்க்க முடியாது. வியாபாரிகளுக்கு ஓரளவு திருப்திகரமான நிலை ஏற்படும்.

### கன்னி

இந்த வாரம் நீங்கள் எடுக்கும் காரியங்களில் கவனமாக செயல்படுதல் வேண்டும். உத்தியோகஸ்தர்கள் நன்மையை உடனடியாக எதிர்பார்க்க இயலாது. தொழில் செய்பவர்கள், உழைப்பு மிகுதியாய் இருப்பதாக உணர்வீர்கள்.

### மீனம்

இந்த வாரம் முயற்சிகள் வெற்றி பெறும். கடன் பளு குறையும். எதிர்பார்த்த தனவரவு உண்டு. உத்தியோகஸ்தர்கள் பல நற்பலன்களைப் பெற்று மகிழ்வீர்கள். வருமானமும் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும். பெண்களுக்குக் குதூகலமான போக்கு தென்படும்.

## வலையில் சிக்கிய வாசம்

உங்கள் பிறப்பு குறித்த ஒரு தந்தி வருகிறது
ஒரு குழந்தையின் உடலுடன்
பிஞ்சுக் கைக் கால்களை அசைத்தபடி
நீங்கள் பிறக்கிறீர்கள்
ஆயிரமாயிரம் ஜென்மாந்தர நினைவுகள்
பொதிந்த அணுக்கள்
உங்கள் மூளையெங்கும் நெய்யப்பட்டிருக்கின்றன
குறிப்புகள் ஏந்திய குழப்ப ரேகைகளை
மூடியிருக்கும்
உங்கள் ரோஜா கைகளை யாரோ முத்தமிடுகின்றனர்
உறக்கத்தில்
உங்கள் பழைய உறவுகளின் உலகங்களுக்கு
தப்பிக்கப் பார்க்கிறீர்கள்
யாதுமறியாத குழந்தை
சிரிப்பதாக
அவர்கள் பூரித்துப் போகிறார்கள்
மெல்ல உங்கள் கை கால்கள் வளர்கின்றன
உங்கள் கனவுகள் நகைக்கப்படுகின்றன
நாடகக் கொட்டகை ஒன்றை நீங்கள் அமைத்துக்
கொள்கிறீர்கள்
சர்க்கஸ் கூடாரத்தின்
அடைக்கப்பட்ட கூண்டிற்குள் உங்கள்
இருசக்கர வாகனம் மேலும் கீழும் சீறுகிறது
திடீரென உங்கள் பாய்மரப் படகை
செலுத்திக் கொண்டிருக்கும்
ஒரு ஜாக் ஸ்பேரோ மீது
நீங்கள் மையல் கொள்கிறீர்கள்
அப்போது உங்கள் உடலெங்கும்
ஒரு சிலந்தியின் கால்கள் ஊர்கின்றன
உச்சத்தில் விழித்தெழும் நீங்கள்
புனர்வாச வலையில் சிக்கியதை உணரும் போது
மீண்டும் ஒரு தந்தி அச்சிடப்படுகிறது.

சுபத்திரா

# சிறியதவறும் பெரிய தண்டனையும்!




அக்பர் சக்கரவர்த்திக்கு வெற்றிலை போடும் பழக்கம் இருந்தது. அதிலும் குறிப்பாக, சௌகத் அலி தயாரிக்கும் பீடா அவருக்கு மிகவும் பிடிக்கும். அவன் தயாரிக்கும் பீடா மிகப் பிரமாதமாக இருப்பதாக அக்பர் அடிக்கடி அவனிடமே புகழ்ந்து பேசுவதுண்டு! அந்த சமயங்களில் சௌகத் அலி அக்பருக்கு சலாம் செய்து விட்டு, "பீடா தயாரிப்பது எனக்கு கை வந்த கலை! என்னுடைய எட்டாவது வயது முதல் இந்தத் தொழிலை நான் செய்து கொண்டு இருக்கிறேன். சக்கரவர்த்தியான உங்களுக்கு நான் பீடா தயாரித்து கொடுப்பதை பெரும் பாக்கியமாக நினைக்கிறேன்" என்றான்.

அக்பர் அன்றுமுதல் தான் எங்கு சென்றாலும் தன்னுடன் சௌகத் அலியையும் உடன் அழைத்துச் செல்லத் தொடங்கினார். இவ்வாறு மூன்றாண்டுகள் கழிந்தன!

ஒருநாள் அலி பீடாவில் கை தவறி சிறிது அதிகமாக சுண்ணாம்பினைக் கலந்து விட்டான். அதைத் தின்ற அக்பரின் நாக்கு வெந்து விட்டது. உடனே பீடாவைத் துப்பியவாறே, "முட்டாள்! உன்னுடைய பீடாவைத் தின்று என் நாக்கு வெந்து விட்டது. பீடா தயாரிப்பதில் தலை சிறந்தவன் என்று ஓயாமல் பெருமையடித்துக் கொண்டாயே! இதுவா நீ தயாரிக்கும் லட்சணம்?" என்று சீறினார்.

அலி பயத்தினால் மிகவும் நடுங்க ஆரம்பித்து விட்டான். மிகக் கோபத்துடன் அவனை முறைத்துப் பார்த்தவாறே, "உடனே சென்று ஒரு பை நிறைய சுண்ணாம்பு கொண்டு வா!" என்று கட்டளையிட்டார். அலி கடைக்குப் போய் ஒரு பை நிறைய சுண்ணாம்பு வாங்கினான். அப்போது அங்கே வந்த மகேஷ்தாஸ் "அலி! என்ன விஷயம்? எதற்கு இத்தனை சுண்ணாம்பு?" என்று கேட்டான்.


"இதை சக்கரவர்த்தி வாங்கி வரச் சொன்னார். ஏன் என்று எனக்குத் தெரியவில்லை!" என்றான் அலி. "தெரியவில்லையா? எந்த சந்தர்ப்பத்தில் இதை வாங்கச் சொன்னார்?" என்று மகேஷ் கேட்க, அலியும் நடந்ததைக் கூறினான்.

சக்கரவர்த்தி எதற்காக ஒரு பை நிறைய சுண்ணாம்பு வாங்கச் சொன்னார் என்று மகேஷுக்குப் புரிந்து விட்டது. உடனே அவன் அலியிடம், "வயிறு நிறைய நெய் குடித்து விட்டு சக்கரவர்த்தியிடம் செல்!" என்றான்......

(மீதி அடுத்த வாரம்)

# அறிவோம் உயர்வோம்


## நீலத் திமிங்கிலம்



திமிங்கிலம் பல வகையிலும் மீன்களை ஒத்திருப்பினும் கூட இது மீன் இனத்தைத் சாராத பாலூட்டி ஆகும். பொதுவாக கடல் வாழ் திமிங்கிலங்களை இருப் பெரும் பிரிவுகளாகப் பிரிக்கின்றார்கள். ஒன்று பற்கள் உள்ளவை. வாயின் இருப் புறங்களிலும் வலிமையான தாடைகளுடன் கூடிய பற்களுடையவை. மற்றது பற்கள் அற்றவை. உலகிலேயே அதிக சத்தம் போடக் கூடிய உயிரினம் திமிங்கலம்தான். Blue Whale-களுக்கு உள்ள மற்றுமொரு தனிச்சிறப்பு என்னவென்றால் இவை தண்ணீருக்கு அடியில் எழுப்பும் 150இற்கும் மேலான டெசிபலைக் கொண்ட (எந்த ஒரு உயிரினங்களையும் மிகைத்த) ஒலி ஒரு ஜெட் விமானம் கிளம்பும் போது ஏற்படுத்தும் சத்தத்தைக் காட்டிலும் கூடுதலாகும். இந்த ஒலி தண்ணீரின் அடியில் கடக்கும் தொலைவு 1000 கிலோ மீட்டருக்கும் மேலாகும் . இவைகள் அவ்வப்போது பாடவும் செய்கின்றன. கிட்டத்தட்ட அரை மணி நேரம் திமிங்கலம் தொடர்ந்து பாடுவதை பதிவு செய்திருக்கிறார்கள்.

# குறள்

## பொருளும் உரையும்



**நிறைநீர நீரவர் கேண்மை**
**பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு.**

**பொருள்**

அறிவுள்ளவர்களுடன் கொள்ளும் நட்பு பிறைநிலவாகத் தொடங்கி முழுநிலவாக வளரும், அறிவில்லாதவர்களுடன் கொள்ளும் நட்போ முழுமதிபோல் முளைத்துப் பின்னர் தேய்பிறையாகக் குறைந்து மறைந்து போகும்.

**மு.வரததாசனார் உரை**

அறிவுடையவரின் நட்பு பிறை நிறைந்து வருதல் போன்ற தன்மையுடையது, அறிவில்லாதவரின் நட்பு முழுமதி தேய்ந்து பின் செல்லுதல் போன்ற தன்மையுடையன.

**சாலமன் பாப்பையா உரை**

பிறை, நாளும் வளர்வதுபோல, அறிவுடையார் நட்பு வளரும் முழு நிலவு தேய்வது போலப் பேதைகளின் நட்பு தேயும்.




# ஆத்திசூடி அறிவோம்

1. தானமது விரும்பு யாசிப்பவர்களுக்கு தானம் செய்.
2. தீவினை அகற்று பாவச் செயல்களைச் செய்யாமல் இரு.
3. துன்பத்திற்கு இடம் கொடேல் முயற்சி செய்யும் பொழுது வரும் உடம்பின் வருத்தத்திற்கு அஞ்சி அதனை விட்டு விடாதே.
4. தூக்கி வினை செய் ஒரு வேலையை முடிப்பதற்கான வழிமுறைகளை நன்கு ஆராய்ந்து அறிந்து பின்பு அச்செயலை செய்யத் தொடங்கவும்.
5. தெய்வம் இகழேல் கடவுளை பழிக்காதே.

## ஒரு நாளின் சிறுபொழுதுகள்...

நாள் - சிறுபொழுதுகள்
(ஒரு நாளில் அடங்கிய ஆறு சிறுபொழுதுகள் )
வைகறை, காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, சாமம்



# ஆங்கிலம் கற்போம்

## வினைச்சொல் வடிவங்கள்




"Have" எனும் ஆங்கிலச் சொல், வினைச் சொல்லாகவும், துணைவினைச் சொல்லாகவும் பயன்படுகிறது. அதிலும் வினைச்சொல் "have" பல்வேறு பொருட்களில் பல்வேறு விதமாக பயன்படும்.அவற்றில் நாம் இன்று "இருக்கிறது" எனும் பொருள் தரும் வாக்கிய அமைப்புகளை மட்டுமே பார்க்கப் போகின்றோம். உதாரணமாக, "I have work" எனும் ஒரு வாக்கியத்தை தமிழில் மொழிப்பெயர்த்தால் "எனக்கு வேலை இருக்கிறது" என்று வரும். இந்த வார்த்தையை "எனக்கு வேலை இருந்தது", "எனக்கு வேலை இருக்கும்", "எனக்கு வேலை இருக்கலாம்." என பல வழிகளில் மாற்றி பயிற்சி செய்யலாம்.

I don't have work.
I haven't got work.
எனக்கு இல்லை வேலை இல்லை
I had work.
எனக்கு வேலை இருந்தது.
I didn't have work.
எனக்கு வேலை இருக்கவில்லை .
I may have work.
I might have work.
I may be having work.
எனக்கு இருக்கலாம் வேலை இருக்கலாம்.

(மீதி அடுத்த வாரம்)

# மண்டபக் காடு




மண்டபக் காடு அல்லது மண்டபக் கிடங்கு என அழைக்கப் படும் இந்த இடம் வடமராட்சி தொண்டைமானாறு கெருடாவில் பகுதியில் உள்ளது. நில மட்டத்துக்கு கீழ் கருங்கல்லால் உருவான இந்தப் பகுதி பெரிய குகை காணப்படுகிறது.

இந்தக் குகை வழியே சுமார் ஒரு கிலோமீற்றர் பயணித்தால் கடற்கரைப் பகுதியை அடையலாம் எனக் கூறப்படுகிறது. எனினும் உறுதிப்படுத்தப்படாத தகவலே. முன்னர், சங்கிலிய மன்னன் இந்தக் குகையை பயன்படுத்தியிருந்தான் என மக்களிடையே கருத்துக்களாக உள்ளன.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இந்த இடம் இப்போது, சிலரால் கற்களுக்காக வெட்டி எடுக்கப்படுகின்றது. ஆனாலும், இதுதொடர்பில், பொறுப்பானவர்கள் அக்கறையின்றி இருக்கிறார்கள். இதனால் இப்பகுதி அழிந்துவிடுமோ என்ற அச்சம் மக்களிடையே உண்டு.

# பனை ஓலைப் பாய்



பாய் என்பதே இன்று அரிதாகி விட்டது. இருப்பதையும் பிளாஸ்ரிக் பாய்களே நிறைத்துள்ளன. மிக அண்மைக்காலம் வரை பாய் என்பது மிக முக்கியமானதாக இருந்தது. அதுவும் பனை ஓலையில் - வர்ண சாயமிடப்பட்ட பாய்களுக்கு தனி மவுஸே உண்டு.

எமக்கு முந்தைய தலைமுறையினர் பாய் முடைதலை (பின்னுதல் அல்லது இழைத்தல்) ஒரு மரபுசார் தொழிலாகக் கொண்டிருந்தனர். 25 ஆண்டுகளுக்கு முன்பு வரை பாய் முடைதல் பெண்களுக்கான பொழுதுபோக்காக மட்டுமல்ல இலாபம் தரும் தொழிலாகவும் இருந்தது.

இப்போதும் ஓலைப் பாய்கள் பயன்படுகின்றன என்றால், அது கோயில் அல்லது விருந்துகளின் போது பெருமளவு சோறைக் கொட்டி ஆறவைப்பதற்காகத்தான். பனை ஓலைப் பாயில் உறங்கி எழுவது உடலுக்கு பல நன்மைகளை தரும்.


# இஞ்சேருங்கோ...!

நமக்கு முந்தைய தலைமுறையினரிடம் கணவனை மனைவி பெயர் சொல்லி அழைப்பதில்லை. இதனால் கணவனை அழைக்கும்போது "இஞ்சேருங்கோ" அல்லது "இஞ்சேருமப்பா" என்றே அழைத்தனர். சிலவேளைகளில் கணவனும் மனைவியை பெயர் சொல்லி அழைக்காமல்"இஞ்சேருங்கோ", "இஞ்சேருமப்பா" என்றே அழைத்தனர். நாகரிகப்போக்கு நம் இளையோரிடம் இருந்து இந்தச் சொற்களை தொலைத்து விட்டது. ஆனாலும், இன்றும் குறிப்பிட்டளவிலானோரிடம் இந்தச் சொற்கள் புழக்கத்தில் உள்ளன. தென்னிந்திய சினிமாவில் ஈழத்தின் தாக்கத்தால் தெனாலி படத்தில் இந்தச் சொற்களும் பாடல் ஒன்றும் இடம்பெற்றுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கச்சான் அல்வா


கச்சான் அல்வா என்ற இந்த இனிப்பு வகை தமிழர்களிடையே மிகவும் பிரபலமானது. சர்க்கரைக் கட்டியைக் காய்ச்சித் தயாரிக்கப்பட்ட இந்தக் கச்சான் அல்வா, இப்போது சீனியைக் காய்ச்சித் தயாரிக்கப்படுகின்றது. இலங்கையில் பிரபலமான உணவு, தமிழ்நாட்டில் கடலை மிட்டாய் என அழைக்கப்படுகின்றது. தென்னமெரிக்கா, வடஇந்தியாவிலும் இந்த உணவுக்கு தனி மதிப்பு உண்டு.



# இராச முறை

யாழ்ப்பாணத்தின் வரலாற்றைக் கூறும் நூல்களில் ஒன்று இராசமுறை. இந்நூல் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்கு முந்தைய காலத்துக்கு உரியது. இந்நூலை இயற்றியவர் யார் என்பதும் தெரியவில்லை. நூலும் கிடைக்கவில்லை.

கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை நூல்களை மூலாதாரமாகக் கொண்டே யாழ்ப்பாண வைபவ மாலையை மயில்வாகனப் புலவர் இயற்றினார் எனக் கூறப்படுகின்றது.



# யாழ்ப்பாண கலாசார நி
# கட்டடக் கலையின் ஊடா
# ஜனநாயகத்தை வெளிப்

கு.பதீதரன்
கட்டடக்கலைஞர்

**பின்னணி**

யாழ்ப்பாணம் பொது நூலகம் மற்றும் புல்லுக்குளம் இரண்டிற்கும் இடையில், முன்பு திறந்வெளி அரங்கு இருந்த இடத்தில் யாழ். மாநகர சபைக்கு சொந்தமான காணியில், குறிப்பிட்ட யாழ்ப்பாண கலாசார நிலையம் அமைகின்றது. இந்திய அரசின் 10 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியில் அமைக்கப்படுகின்றது. இதற்கான கட்டட வடிவமைபப்பு ஆனது, 2011 ஜூன் மாதம் அறிவிக்கப்பட்ட கட்டடக்கலைஞர்கள் இடையில் நடத்தபட்ட போட்டியின் ஊடக தெரிவு செய்யப்பட்டது.

இப்போட்டியினை இலங்கை கட்டடக் கலைஞர் அமைப்பு மற்றும் இந்திய உயர்ஸ்தானிகரகம் இணைந்து மேற்கொண்டனர். போட்டியில் பங்குபற்றிய இலங்கை மற்றும் இந்தியாவைச் சேர்ந்த 29 வடிவமைப்பாளர்களில் கொழும்பில் வசிக்கும் கட்டடக்கலைஞர் மதுர பிறேமதிலக மற்றும் அவரது நிறுவனத்தினர் முதலிடம் பெற்றனர். இவருடைய கற்பனையில் உருவான கட்டடம் 2016 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டு முடிவுறும் தருவாயில் இருக்கின்றது.

**கட்டட வடிவமைப்பு பற்றி**

குறித்த திட்டத்திற்கான எண்ணம் பின்வரும் ஆரம்பப் புள்ளிகளில் இருந்து உருவாகியதாக கட்டடக் கலைஞர் மதுர பிறேமதிலக குறிப்பிட்டுள்ளார்.

1. அருகில் இருக்கும் பொது நூலகம்
2. யாழ்ப்பாணத்தில் உள்ள பொதுவெளிகளில் முக்கியமான கோவில்கள். அங்கு இருக்கும் தேர் முட்டி, படிகள், கேணி.
3. யாழ்ப்பாணத்தவர்கள் கல்விக்கு அளிக்கும் முக்கியத்துவம்.

இவற்றைக் கருத்தில் கொண்டு மொத்த கட்டடத் தொகுதி நான்கு பகுதிகள் கொண்டு வடிவமைக்கப்பட்டது.

அருங்காட்சியகம் - இந்தக் கட்டடம் பொது நூலகத்திற்கு சமாந்தரமாக அதன் உயரத்திற்கு மதிப்பளித்தும் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக மொ்த்தக் கட்டடத் தொகுதி நிலத்திற்குள் சிறுபகுதி அமிழ்த்தப்பட்டுள்ளது. இதில் நிரந்தர மற்றும் தற்காலிக காட்சியகம், தகவல் நிலையம் மற்றும் கட்டடத் தொகுதிக்கான சேவையாளர்களின் பகுதிகளை கொண்டுள்ளது.

இதனோடு சேர்ந்ததாக இரண்டாவது கட்டடம் 612 பேர் பயன்படுத்தும் வகையில் சகல வசதிகளுடைய ஆற்றுகைக்கான அரங்கு உள்ளது.


மேலும், மூன்றாவது பகுதியாக 12 தளங்கள் கொண்ட கற்றல் கோபுரம் உள்ளது. இதில்



யாழ்ப்பாண கலாசார நிலையம்

முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் பகுதி, 100 பேர் பங்குபற்றக்கூடிய கேட்போர் கூடம், சிற்றுண்டிச்சாலை, பல்லூடக வசதி கொண்ட நூலகம், வகுப்பறைகள் மற்றும் பார்வையாளர் தளம் - இதில் நின்று யாழ்பாணத்தின் பெரும்பகுதியை பார்வையிடக்கூடிய வசதி உண்டு. இக்கட்டடம் முழுமையாக இயற்கை சக்தியில் இயங்கும் வகையில் சூரிய ஒளியில் மின்சாரம் தயாரிக்கப்படும் வசதி உண்டு. இயற்கையான காற்று உள் வரும் வகையில் பெரிய சாளரங்களும், மேலும் கோபுரத்திலில் நேரடியாக சூரியக்கதிர்கள் விழாத வகையில் மரச் சலாகைகளால் முற்றாக போர்க்கப்பட்டுள்ளது.


நான்காவது பகுதி திறந்தவெளி இதில் வேப்ப மரங்கள், அமர்ந்து இளைப்பாறுவதற்கு இருக்கை வசதிகள், சிற்றுண்டிச்சாலை, சித்திரங்களை காட்சிப்படுத்தும் சுவர், சுவரில் உள்ள சிறிய மேடை, கோவில் தேர் முட்டிகளில் காணப்படுவது போலான படிகள் அதன் தொடர்ச்சியாக புல்லுக்குளத்தில் படிகளும், குளத்தில் மிதக்கும் மேடையும் உண்டு. இந்தப் பகுதி மக்கள் இலவசமாக பயன்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இதில் குறிப்பிடப்படக்கூடிய முக்கியமான விடயம் கலாசார நிலையத்தை சுற்றி பாதுகாப்பு வேலிகளோ உள்ளே வருவதை கட்டுப்படுத்துவதற்கான கதவுகளோ இல்லை. இதனூடாக இது எல்லோருக்குமான இடமாக வெளிப்படுத்தப்படுகின்றது. எல்லோரும் பங்குபற்றி பயன்பெறலாம் என்பதால் இது


மிதக்கும் மேடையும் - கலாசார நிலையமும்



# நிலையம்
# டாக
# ிப்படுத்தல்




கட்டடக்கலையூடாக ஜனநாயகத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

சுற்றியுள்ள மூன்று பாதைகளினூடக எவரும் உள் நுழையலாம் ஆனாலும் முக்கிய மூன்று கட்டடங்களுக்கான பாதுகாப்பு ஏற்றபாடுகளும் தனித்தனியான முகாமைத்துவமும் உள்ளது.

யாழ்ப்பாணக் கலாசார நிலையமானது சர்வதேச தரத்தில் கலை ஆற்றுகை களை நிறைவேற்றும் வகையில் பெரும் நிதிச்செலவில் வடிவமைக் கப்பட்டுள்ளது.

குறித்த கட்டடத் தொகுதியை பராமரிப்பது மற்றும் திறம்பட இயக்குவது என்பது யாழ் மாநகர சபையால் தற்போதுள்ள நிலையில் இயலாத காரியம் என நகரபிதா நல்லூர் கோவில் வீதியில் அமைந்துள்ள Sri Lanka



வடிவமைத்த கட்டடக் கலைஞர் மதுர பிறேமதிலக

Archive of Contemporary Art, Architecture & Design என்ற நிலையத்தில் மார்ச் மாதம் 31ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில தெரிவித்திருந்தார்.

போதியளவான ஆளணியினர் மற்றும் இதர செலவுகள் போன்றவற்றுக்கு மாதாந்தம் அண்ணளவாக 5 மில்லியன் ரூபா வரையில் செலவாகலாம் என உத்தேச மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

அது மட்டுமல்லாமல் இதுவரையிலும் கலாசார நிலையத்தை இயக்குவதற்கும் பராமரிப்பதற்கும் தேவையான ஆளணியினரை தயார்ப்படுத்தும் பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இந்தநிலையில் குறித்த கலாசார நிலையத்தின் எதிர்காலச் செயற்பாடுகள் என்பது கேள்விக்குறியாக உள்ளது.


இது பற்றி பிராதன வடிவமைப்பாளராகிய கட்டடக் கலைஞர் மதுர பிறேமதிலக கருத்து தெரிவித்த போது கலாசார நிலையத்தின் முகாமைத்துவம் என்பது தனியாக அரச கட்டமைப்பான மாநகர சபையால் மட்டும் மேற்கொள்ளப்படாது அரச மற்றும் தனியார் பங்களிப்புடன் சேர்ந்த கட்டமைப்பால் நிர்வகிக்கப்படலாம். குறித்த நிர்வாக அணியில் அர்ப்பணிப்புடன் இயங்கக்கூடிய சர்வதேச தொடர்புகள் உள்ளவர்கள் நியமிக்கப்பட்டால், அவர்களூடாக நிதி திரட்டல்கள் மேற்கொள்ளப்பட்டு தொடர்ச்சியாக இயங்க முடியும் மேலும் நிலையத்தை முகாமைத்துவம் செய்வதற்கு கலைசார்ந்த போதிய அறிவும், திறமையுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிபுணர்களின் உதவியுடன் சர்வதேச தரத்தில் முகாமைத்துவம் செய்தால் மட்டுமே இந்த நிலையத்தின் வெற்றி தங்கியுள்ளது எனத் தெரிவித்தார்.


மேலும் சகல விதமான நிதி நிலையில் உள்ளவர்களும் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள நிலையத்தின் வெற்றியையும் நீடித்த தன்மையையும் உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பு மக்களுடையதே எனவும் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் கலாசார நிலையமானது இயங்கும் போது கலைகளை வளர்ப்பதற்கும் ஆற்றுகைகளை காட்சிப்படுத்தவும் ஒரு மத்திய நிலையமாக இருக்கும். இந்நிலையம் மக்களால் முழுமையாக பயன்படுத்தப்படுமானால் தென்னாசியாவிலேயே கலைகளுக்கான முத்திய நிலையமாக உருவாகும் எனவும் தெரிவித்தார் இதன் வடிவமைப்பாளர் கட்டடக்லைஞர் மதுர பிறேமதிலக.

படங்கள் உதவி : TEAM ARCHITRAVE





கலாசார நிலையத்தில் சேர்க்கப்பட்ட நம் பாரம்பரிய சிறப்பம்சங்கள்





# அதிகாலை விழிப்பவரா நீங்கள்...? நிச்சயம் நேர்மறையான மனிதர்தான்!



“நேரம் இல்லாமல் கிடக்கு..., கொஞ்சம் கூட நேரம் கிடைச்சா நல்லது” என்று சிலர் புலம்பக் கேட்கலாம். ஆனால், அவர்களது புலம்பலுக்கான தீர்வு வெகு அருகிலேயே இருக்கிறது. அதிகாலை விழித்தெழுதல். அதிகாலை விழித்தெழுவதன் மூலம், “நாம் தேடும் அந்த கூடுதல் காலம் இலவசமாகக் கிடைக்கும். கூடவே, உடலுக்கும் மனதுக்கும் பல நன்மைகளையும் கொடுக்கும்” என்கிறது மருத்துவ அறிவியல்.

’சோர்வின்றி கண் விழிக்கிறோம் - சூரியன் மெல்ல உதிப்பதை ரசிக்கிறோம் - பறவைகளின் குரல் ஒலிகள் நம்மைப் பரவசப்படுத்துகின்றன. அதிகாலையின் குளுமையும், தூய்மையான காற்றும் மனதை உற்சாகப்படுத்துகின்றன. அதிகாலை தரும் தனிமை, அந்த நாளுக்கான திட்டத்தை வடிவமைக்க துணையாயிருக்கிறது.’ இப்படிப்பட்ட சூழல் ஏதோ கனவுலகத்தில் உணரப்படுவது அல்ல. அதிகாலையில் கண்விழிப்பதால் நாம் தரக்கூடியது.

சூரியன் உதிக்கும்போது கண்விழிப்பதும், சூரியன் மறைந்ததும் தூக்க உணர்வு ஏற்படுவதும், நமது மரபணுக்களில் பதிந்து தொடர்ச்சியாய் நடைபெற்றுக் கொண்டிருக்கும் சுழற்சி. இதுவே நமது உடலின் செயல்பாடுகளுக்கு முக்கிய காரணியாக இருக்கும் ‘சர்காடியன் ரிதம்’ (Circadian rhythm), முறைப்படி நடப்பதற்கான அடிப்படையும் கூட. சர்காடியன் சுழற்சி முறையாக இருந்தால், நேர்மறை எண்ணங்கள் (Positive thinking) அதிகரிக்கும் என்கிறது ஆய்வு. உறக்கத்தை முழுமையாக அனுபவித்து, அதிகாலையில் விழிப்பவர்களுக்கு நேர்மறை எண்ணங்கள் அதிகரிப்பதற்கு இதுவே காரணம்.

தாமதமாக எழுபவர்களுக்கு மனச்சோர்வு (Depression) ஏற்படுவதற்கான வாய்ப்புகள் பலமடங்கு அதிகரிக்கிறதாம். அதிகாலையில் கண்விழிப்பவர்களுக்கு முடிவு எடுக்கும் திறன் (Decision making capacity) சிறப்பாக இருக்கும். உடலில் ஹோர்மோன்களின் செயல்பாடுகளும் சீராக நடைபெறும். மாணவர்களின் அறிவாற்றலும் பெருகும். மன அழுத்தம் குறையும். என அதிகாலை விழிப்பதன் நன்மைகளைப் பற்றி எடுத்துரைக்கின்றன ஆய்வுகள். அதிகாலையில் எழுபவர்கள், கூடுதல் ஆற்றலுடனும் புத்துணர்வுடனும் செயல்படுவதாகவும், நீண்ட நாள்கள் மகிழ்ச்சியாக வாழ்வதாகவும் உறக்கம் சார்ந்த ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

மேற்சொன்ன ஆய்வு முடிவுகளை, ‘புத்தி யதற்குப் பொருந்து தெளிவிக்கும்...’ எனத் தொடங்கும் சித்த மருத்துவப் பாடல், பல நூற்றாண்டுகளுக்கு முன்பே விளக்கியிருக்கிறது. மனம் சார்ந்த செயல்பாடுகள் (புத்தி) அனைத்தும் மேம்படும். உடலுக்குள் நடக்கும் சூக்கும இயக்கங்கள் (ஹோர்மோன் சுரப்பு, விழிப்பு-உறக்க சுழற்சி) முறைப்படுத்தப்படும் என பல விஷயங்களைப் பேசுகிறது இந்தப் பாடல்.

**என்ன செய்யலாம்:**

காலையில் பறவைகளின் குரல்கள் நம்மைத் தட்டி எழுப்பும்படி ஜன்னல்களில் கட்டப்பட்டிருக்கும் துணியை (ஸ்கிறீன்), சற்று விலக்கி வைக்கலாம். பெற்றோர்களும் அதிகாலையிலேயே எழுந்து குழந்தைகளுக்கு முன்மாதிரியாக இருப்பது அவசியம். இரவு பத்து மணிக்கு முன்பாக உறங்கச் செல்வது முக்கியம். வயதைப் பொறுத்து சுமார் 7 - 8 மணிநேர உறக்கமும் தேவைப்படுகிறது. சரியாக உறங்காமல், அதிகாலையில் எழுவதால் முழு பலனையும் அடைய முடியாது. ஒரு முறை அலாரம் அடித்ததும் எழுவது நல்லது. 'ஸ்னூஸ்' (Snooze) செய்துகொண்டே இருந்தால், உறக்கமும் முழுமையடையாது; சோர்வே மிஞ்சும்.

அதிகாலையில் எழுவது தொடக்கத்தில் சற்று சிரமமாக இருந்தாலும், அதன் பலன்களை உணர்ந்தபின், வழக்கமாகிவிடும். செடென்டரி வாழ்க்கை முறையில் (Sedentary Life style) பயணித்துக்கொண்டிருக்கும் நமக்கு, அவசியமாக இருக்கும் உடற்பயிற்சிக்கு நேரம் கிடைக்கும். அனைத்து செயல்களிலும் பரபரப்பைக் காட்ட வேண்டிய அவசியமிருக்காது. தாமதமாக விழிக்கும்போது, உடலுக்கு ஆற்றலைக் கொடுக்கும் காலை உணவையும் தவிர்க்க வேண்டியிருக்கும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சூரிய உதயத்துக்கு முன் எழும் பழக்கம் குறைந்ததால் - விடியற்காலையில் ‘கொக்கரக்கோ’ என்று கூவி, ‘விழித்துக்கொள் மனிதனே’ என தலை சிலுப்பிய சேவல்கள் கொக்கரிக்க மறந்துவிட்டன. அதிகாலையில் கானம் பாடிய குயில்கள், தங்கள் தொழிலை கைவிட்டுவிட்டன. விரைவாக எழுந்து, மலர்கள் மெலிதாக மொட்டவிழ்க்கும் அதியசத்தை ரசித்த ரசிகனின் ரசனையும் ருசியற்றுப் போய்விட்டது. சூரியன் உதிக்கும்போது ஆரவாரம் செய்த சிறுவர்களின் கூட்டங்களும் உறங்கிக் கொண்டே இருக்கின்றன, அதிகரித்த சுமை காரணமாக! இயற்கை அளித்த வரங்களை மீண்டும் மனமுவந்து ஏற்றுக்கொள்வோம், அதிகாலையில் இமைகளைக் கட்டவிழ்த்து!

நாம் பின்பற்றி வந்த ஆரோக்கியமான பழக்கங்களை கைவிட்டு, நமது உடலில் நடைபெறும் பல சூக்கும செயல்பாடுகளுக்கு முட்டுக்கட்டைப் போடத் தொடங்கிவிட்டோம். இனி விழித்துக்கொள்வோம். பல நோய்களைத் தடுக்கும் ஆற்றல் கொண்ட அதிகாலையில் உறக்கம் கலைக்கும் விதியைக் கடைப்பிடிப்போம். 'பழகப் பழகப் புளிக்காமல் இனிக்கும் விஷயம் அதிகாலையில் கண்விழிப்பது!' இனிக்க இனிக்க பழகுவோம் - அதிகாலை தரும் இனிமையைச் சுவைப்போம்!

# மீண்டும் வருமா...!

அது அமெரிக்காவின் ஓர் இலையுதிர் காலம். ஆனால், அது வழக்கமானது இல்லை. குறைந்தபட்சம் அங்கு வாழ்ந்த அணில்களுக்காவது அது வழக்கமான இலையுதிர் காலமாக இல்லை. அந்த மக்கள் தங்கள் வாழ்வில் இதுவரை இத்தனை அணில்கள் இவ்வளவு பெரிய படையாகத் திரண்டு வந்து பார்த்ததேயில்லை. 1968 ஆம் ஆண்டு இலையுதிர் காலத்தின்போது கிழக்கு அமெரிக்காவில் இயற்கை அசாதாரணமான சூழலை உருவாக்கியது. அந்தச் சூழல்தான் அமெரிக்க அணில்கள் அப்படிப் படையெடுக்கக் காரணமாக அமைந்தன. அதுவும் நூறோ இருநூறோ அல்ல. ஆயிரக்கணக்கில் அணில்கள் படையெடுத்தன. காடுகளை, மலைகளை, ஆறுகளைக் கடந்து நெடுஞ்சாலைகளைக் கடந்து கிராமங்களைக் கடந்து கிழக்கு அமெரிக்காவையே கடந்து படையெடுத்தன.

ஆறுகளைக் கடக்கும் அணில்களில் பலவும் நீந்திப் பிழைக்க முடியாமல் மூழ்கிச் செத்துக் கொண்டிருந்த செய்திகள் அன்று தினசரி செய்தித்தாள்களை நிரப்பிக் கொண்டிருந்தன. ஒரு கிலோமீற்றர் சாலையில் குறைந்தபட்சம் ஒரு அணிலாவது வாகனங்களில் அடிபட்டு இறந்து கிடப்பதை வனத்துறை அதிகாரிகள் பதிவு செய்தனர். இத்தனை தடங்கல்களையும் இத்தனை இழப்புகளையும் மரணங்களையும் கடந்து அந்த சாம்பல் நிற அணில்கள் படையெடுத்தன. ஏனென்றால், பசி அவற்றுக்கு இதைவிட அதிகமான இழப்புகளை மரணங்களைப் பரிசளித்துக் கொண்டிருந்தது.

அவை அத்தனையும் கிளம்பி எங்கே சென்றுகொண்டிருந்தன? ஏன் சென்றுகொண்டிருந்தன?

1967 ஆம் ஆண்டு, அளவுக்கு அதிகமான விளைச்சல். சோளம், கருவாலி (Acorns), செஸ்நட்ஸ் என்று அனைத்தும் போதுமான அளவுக்கும் அதிகமாகவே கிடைத்தன. அணில்கள் போதும் போதும் என்ற அளவுக்குச் சாப்பிட்டன. விளைவாக அதிகமாகவே இனப்பெருக்கம் செய்தன. இந்த மரங்கள் அதற்கு அடுத்த ஆண்டே வறட்சியைச் சந்திக்கத் தொடங்கின. பழ மரங்கள் நிறைந்த காடுகள் கிழக்கு அமெரிக்கா முழுவதும் பெரிய வறட்சியைச் சந்தித்தது. மொத்தமும் வாடிக் கிடந்தன. அணில் கூட்டங்களில் புதிதாகப் பிறந்த அணில்கள் பசியில் வாடத்தொடங்கின. உணவு சேமிப்புகள் அனைத்தும் கரைந்தன. அணில்கள் பழ மரங்கள் நிறைந்த புதிய காட்டைத் தேடியாக வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டன. ஏனென்றால் தம் கூட்டங்களில் பலவும் பசியால் செத்து விழுந்துகொண்டிருந்தன. அணில்கள் புதிய, பழ மரங்கள்



நிறைந்த காடுகளைத் தேடித் தங்கள் பயணத்தைத் தொடங்கின.

அணில் நிபுணரும் ஆய்வாளருமான வேகன் ஃப்ளைஜெர் (Vegn Flyger) அப்போது நேரடியாக இந்த நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார். ஃப்ளைஜெர் இந்த நிகழ்வு குறித்த தன் ஆய்வறிக்கையில், “நான் மெயின் என்ற இடத்திலிருந்து மேரிலாந்திற்கு செப்ரெம்பர் 13 ஆம் திகதி பயணித்துக் கொண்டிருந்தேன். அப்போது அசாதாரண எண்ணிக்கையில் அணில்கள் சாலை விபத்தில் இறந்துகிடந்ததைக் கவனித்தேன். ஸ்மித்சோனியன் என்ற ஒரு நிறுவனம் அதன்பிறகு என்னை தொடர்புகொண்டது. அவர்கள் அவரைச் சந்தித்ததிலிருந்து சுமார் ஒரு வாரத்திற்கு இதுமாதிரியான சாலை விபத்துகள் அதிகம் நிகழ்ந்த இடங்களைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள். அதன்மூலம் அணில்கள் பயணிக்கும் பாதையைக் கணிக்க முயன்றார்கள்” என்று குறிப்பிட்டுள்ளார்.

நியூயோர்க் காட்டுயிர் பாதுகாப்புத்துறை சாலை விபத்துகளில் இறந்த சுமார் 122 வகை அணில்களைச் சேகரித்தது. ஹட்சனிலிருந்து பல முறைப் பாடுகள் அணில்கள் நீரில் மூழ்கி இறந்திருப்பதாக வந்து கொண்டேயிருந்தன. செப்டம்பர் மாதம் 28 ஆம் திகதி ஒரு பத்திரிகையில் “ஹட்சன் பள்ளத்தாக்குமீது படையெடுக்கும் அணில்கள்” என்று தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டிருந்தனர்.

ஒக்ரோபர் 6 ஆம் திகதி “நம்பமுடியாத எண்ணிக்கையில் அணில்களின் படையெடுப்பு” என்ற தலைப்பில் நாளிதழ் ஒன்றில் செய்தி வந்துள்ளது. பொதுமக்கள் இறந்துகிடந்த அணில்களின் சடலங்களை அப்புறப்படுத்திக் கொண்டிருந்தனர். ஒவ்வொருவரும் சுமார் ஐந்து முதல் ஆறு பைகளை நிரப்பிவிட்டிருந்தனர். அப்போதும் அவற்றின் வருகை நின்றபாடில்லை. அத்தனை அணில்கள் அவர்களைச் சுற்றி வாழ்ந்திருந்தன என்பதை நினைக்கவே அவர்களுக்குப் பிரமிப்பாக இருந்திருக்கிறது. “எங்களைச் சுற்றி இத்தனை ஆயிரம் அல்லது லட்சம் அணில்களா வாழ்ந்து கொண்டிருந்தன!” என்று டென்னஸ்ஸி பகுதியைச் சேர்ந்த பொப் புர்ச் என்ற அதிகாரி நாளிதழுக்கு அளித்த பேட்டியில் தனது அதிர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளார்.

அணில்களின் இந்த மிகப்பெரிய இடப்பெயர்வுக்கு மையப்புள்ளியாகத் திகழ்ந்தது வடக்கு கரோலினாதான். அங்கு வேனெஸ்வில் (Waynesville) என்ற பகுதியில் மக்கள் / பொன்டானா, சியாவோ ஏரிகளை அணில்கள் நீந்திக் கடப்பதைப் பார்த்துள்ளனர். வேறோர் இடத்தில் இருபது மைல்களுக்குச் சுமார் நாற்பது என்ற விகிதத்தில் இறந்த அணில்களின் சடலங்களைச் சேகரித்துள்ளனர். ஸ்மோகீஸ் என்ற இடத்தில் அணில்கள் பசியால் வாடி மடிந்துகொண்டிருப்பது பற்றி செப்ரெம்பர் 20 ஆம் திகதி நியூயோர்க் ரைம்ஸ் செய்தி வெளியிடும் அளவுக்கு அங்கு அதிக அளவில் அணில் மரணங்கள் நிகழ்ந்துள்ளன.


ஃப்ளைஜெர் தனது ஆய்வறிக்கையில், அவர் வடக்கு கரோலினாவுக்கு வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது நடந்ததைக் குறிப்பிட்டிருக்கிறார். அவர் வடக்கு கரோலினாவுக்குப் பயணித்தபோது ஓரிடத்தில் நெடுஞ்சாலை ஓட்டலில் அறையெடுத்துத் தங்கியிருந்து சில ஆய்வாளர்கள் இறந்த அணில்களுக்குப் பிரேத பரிசோதனை செய்திருக்கிறார்கள். அந்தப் பிரேத பரிசோதனை அறிக்கைகளையும் அவர் குறிப்பிட்டிருக்கிறார். அதில் அசாதாரணமாகவோ சிக்கலாகவோ ஏதேனும் நடந்திருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என்று நீரில் மூழ்கியோ சாலையில் அடிபட்டோ அல்லாமல் இறந்துபோன அணில்கள் பெரும்பாலும் பசியால் மட்டுபே இறந்திருப்பதும் அவருக்குத் தெரியவந்தது.

அதுகுறித்து, “பலகட்ட ஆய்வுகள் மற்றும் பலதரப்பட்ட மக்களிடம் விசாரித்ததன் மூலமாக நான் அறிந்தனவற்றை இங்கே கூறுகிறேன். 1967 ஆம் ஆண்டு அதிர்ஷ்டலாப பரிசு அடித்ததுபோல் அணில்களுக்கு தேவையான பழ மரங்கள் காய்த்துத் தொங்கியிருக்கின்றன அப்போது பிறந்த அணில் குட்டிகள் நன்றாகத் தின்று கொழுத்துவிட்டன. ஆனால், அதைத் தொடர்ந்து வந்த ஆண்டில் தேவைக்குக்கூட பழ மரங்கள் காய்க்கவில்லை. அவை சேமித்து வைக்கக்கூடப் போதுமான உணவு கிடைக்கவில்லை. அதனால்தா அவை இப்படியொரு மிகப்பெ இடப்பெயர்வுக்கு முயன்றிருக்க வேண்டும்” என்று அவர் இறுதியில் குறிப்பிடுகிறார்.

‘தேவையான உணவு இல்லாதபோது விலங்குகள் உணவுதேடி அலைவது இயற்ன யாகவே நடப்பதுதான். அதிலு உணவு கிடைப்பதற்கான அறிகு களே இல்லாத நிலை ஏற்பட்டால், சாலைகள் அதிகமாகி, காடுகள் குறைந்து அல்லது தொடர்ச்சியாக இருந்த காடுக துண்டாக்கப்பட்டு தொடர்பற்றுப் போனால், இதுபோலத்தான் விலங்குகள் உணவுதேடி வெளிபே வரும். இது இயற்கை. வேறுபா என்னவென்றால் அந்த ஆண்டி அது வழக்கத்தைவிட அதிகமா நடந்துள்ளது” என்று ஃப்ளைஜெரின் கணிப்பை உறுதி செய்த றார் இப்போது அரிசோனா பல்கலைக்கழகத்தில் அணில்களை ஆய்வுசெய்துவரும் பேராசிரியர் ஜான் கொப்ரோவ்ஸ்கி (John Koprowski).

அது காடுகளில் மரங்களை ; வெட்டும் தொழிற்சாலைகள் சட்டப்படி உரிய அங்கீகாரங்களோடு இயங்கிக்கொண்டிருந்த காலகட்டம். அளவுக்கு அதிகமாகக் காடுகளை அழித்து மரங்களை ரத்தம் சிந்த வைத்துக் கொண்டிருந்தார்கள். காட்டு நிலங்களைக் காப்பாற்றிவந்த அவற்றின் மேற்பகுதி முற்றிலும் துடைத்தெறியப்பட்டு சிவப்புநி மண் தரை தெரியுமளவுக்குக் காட்டின் ரத்தத்தைக் குடித்துக் கொண்டிருந்தன மரம் வெட்டு சர்வதேச நிறுவனங்கள்.

(22ஆம் பக்கம் பார்க்க)



புதுப் புது நிறங்கள் உடைந்து
மேசையின் மீது விழுகிறது
அது எங்கிருந்து விழுகிறது என
நான் வியப்போடு பார்க்கிறேன்
மிகுந்த பிரமிப்பு எனக்கு
அது பறவை வெளியில்
ஒரு ஓவியன் விட்டுச் சென்ற
தூரிகையிலிருந்து வடியும் குருதி
அல்லது
காற்றின் காதலுக்கு
மேகங்களின் உதட்டுச் சாயத்திலிருந்து
வடியும் முத்தத்தின் எச்சம்
அப்படித்தான் இருக்க வேண்டும்
நிறங்களை மிகுந்த ஆர்வத்துடன் சேமித்து
எனது அறை முழுவதுமாய்
அப்பிவிடுகிறேன்
அங்கு பல வண்ணத்துப்பூச்சிகள்
பறக்க ஆரம்பிக்கின்றன.

**- ஏ.நஸ்புள்ளாஹ்.**

# 'தங்கப்பனை' விருது




கேன்ஸ் திரைப்பட விழா (Cannes Festival) என்பது பிரான்சின் கேன்ஸ் நகரில் ஆண்டு தோறும் நடைபெறும் ஒரு பன்னாட்டுத் திரைப்பட விழாவாகும். 1946 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட உலகின் மிகப் பழையதும், உலக அளவில் மிகுந்த செல்வாக்கும் மதிப்பும் கொண்ட ஒரு நிகழ்வும் ஆகும். இவ்விழாவில் உலகளாவிய ரீதியில், ஆவணத் திரைப்படங்கள் உட்பட அனைத்து வகைத் திரைப்படங்களும் காட்சிப்படுத் தப்படுகின்றன.

அழைப்பிதழ் பெற்றோர் மட்டுமே பங்குகொள்ளும் இவ்விழா ஆண்டுதோறும் மே மாதமளவில் நடைபெறுகின்றது. அந்தவகையில் 72 ஆவது 'கேன்ஸ் திரைப்பட விழா' கடந்தவாரம் நடைபெற்று முடிந்திருக்கிறது. கடந்த ஆண்டு ஜப்பான் திரைமேதை ஹிராகாசு கொரேதா 'ஷாப் லிப்டர்ஸ்' திரைப்படத்திற்கு மிக உயரிய 'தங்கப்பனை' விருதை பெற்றார்.

இந்த ஆண்டு கொரிய இயக்குநர் பொங் ஜூன் ஹோ 'பாரசைட்' என்ற திரைப்படத்திற்கு 'தங்கப்பனை' விருது பெற்று இருக்கிறார். தொடர்ச்சியாக ஆசிய இயக்குநர்கள் 'தங்கப்பனை' விருதை பெற்றமை குறிப்பிடத்தக்கது. இது ஒரு வரலாற்று சாதனை.




உங்கள் ஆக்கங்களை **'வாசிகை' , ஆசிரியர், புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம்** என்ற முகவரிக்கோ அல்லது **sinnarajavimalan18@gmail.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

# பதேர் பாஞ்சாலி

**சு.சுரேஸ்**




1928 - 29 காலகட்டங்களில் வங்க மொழியில் தொடராக வெளிவந்து பெரும் வரவேற்பை பெற்ற நாவல் 'பதேர் பாஞ்சாலி'. ஏறத்தாழ பத்துக்கும் மேற்பட்ட இந்திய மொழிகளிலும், பத்துக்கும் குறைவான அயல்நாட்டு மொழிகளிலும் இது மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. 'யுனெஸ்கோ' அமைப்பு ஆங்கிலத்தில் வெளியிட தேர்ந்தெடுத்த இந்திய மொழி ஆக்கங்களில் பதேர் பாஞ்சாலியும் ஒன்று. இந்நூல் ஆங்கிலத்தில் மட்டுமே இரண்டு மொழிபெயர்ப்புகளாக வெளிவந்துள்ளன.

இதன் செவ்வியல் படைப்புத் தன்மைக்காகவே இது இயக்குநர் சத்யஜித் ரே அவர்களால் திரைப்படமாக்கப்பட்டது. நாவல் வெளிப்படுத்தும் உணர்வுகளை அப்படியே படமெடுக்க சிரமப்பட்ட இயக்குனர் கதையில் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்தி பின்னர் படமாக்கினார். கதையின் களமாக வரும் அழகிய வங்கக் கிராமமான நிச்சிந்தாபுரத்தை போன்ற கிராமத்தை கண்டடையவும் ரே சிரமப்பட்டதாக கூறியிருப்பது இந்நாவல் கொண்டுள்ள செவ்வியல் தன்மையையும், அது படைக்கப்பட்ட மேன்மையையும், எழுத்தாளரின் கற்பனாசக்தியையும் நமக்கு உணர்த்துகிறது.

புரோகிதங்கள் செய்தும் ஆன்மிகப் பிரசங்கம் செய்தும் தன் குடும்பத்தை நடத்தி வரும் ஏழை பிராமணனாகிய ஹரிஹரனின் மகள் சிறுமி துர்காவும், அவள் தம்பி அப்புவும் நிச்சிந்தாபுரத்தில் ஓடி ஆடி வளைய வருகிறார்கள். வாழ்வின் கஷ்டங்களையே அறியாது வளர்ந்து வரும் அவர்களுக்கு அக்கிராமத்தின் மூங்கில் புதர் காடுகளும், சாமதி ஆறும், வாய்க்கால்களுமே சொர்க்கம். அவர்கள் இறங்கி பூக்களைச் சேகரிக்கும் சங்காரிகுளமும், விளையாடும் சோனாடங்கா மைதானமும், மாந்தோப்பும், மீன்பிடிக்கும் சாகப்துறையும், தேவி விசாலாட்சி கோயிலும் நம் முன்னே காட்சிகளாக விரியும் வண்ணம் எழுத்தாளர் படைத்திருப்பது அவரின் எழுத்தின் சிறப்பு.


பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஒரு வங்காள கிராமத்தின் எளிய மக்களின் அன்றாட வாழ்க்கை நடைமுறைகளை அவர்களின் உணர்வுகளை அதன் இயல்பு மாறாமல் முன்வைக்கிறது இந்நாவல். அதை மிகைப்படுத்தாமல் ஆடம்பரமில்லாமல் படைத்திருப்பதே எழுத்தாளரின் கலைத்திறன். நாவலின் முக்கிய கதாபாத்திரங்கள் தங்கள் யதார்த்த நிலையை மீறிய கனவுகளைக் காண்பவர்களாகவே இருக்கிறார்கள் என இந்நாவலுக்கு முன்னுரை எழுதியுள்ள சுகுமாரன் அவர்கள் சொல்லியிருக்கிறார். அவர் சொல்வது முற்றிலும் உண்மை என்பது நாவலை வாசிக்கும்போது நமக்கு கொஞ்சம் கொஞ்சமாகத் தெரிய வருகிறது.

ஹரிஹரன், அவன் மனைவி சர்வஜயா, ஹரிஹரனின் தூரத்து உறவான அவன் அக்கா இந்திரா, பிள்ளைகள் துர்கா, அப்பு ஆகியோர் நாவலில் அவரவர் இயல்பிலேயே பொருந்திவிடுவது நாவல் வாசிப்பை எளிதாக மாற்றிவிடுகிறது. துர்காவும் அப்புவும் செய்யும் சுட்டித்தனங்கள், அத்தை இந்திராவின் மீது அவர்கள் வைக்கும் பாசம், நாத்தனாரை வெறுத்து ஒதுக்கும் சர்வஜயா என டிபிகல் கிராமத்து குடும்ப உறுப்பினர்களின் இயல்பான மனநிலையை எடுத்துக் காட்டியுள்ளார் எழுத்தாளர். வீட்டு வேலைகளினூடே குழந்தை அப்பு தன் தாயிடம் விளையாடுவது, துர்காவின் துடுக்குத்தனங்கள் என அழகியலான தருணங்களை எழுத்தாக வடித்து நம்மை நெகிழ்ச்சியடைய வைக்கிறார் விபூதிபூஷண் பந்த்யோபாத்யாய். அவ்வுணர்வை அப்படியே தமிழில் நம்மிடம் கடத்துகிறார் மொழிபெயர்ப்பாளர் ஆர். ஷண்முகசுந்தரம்.

அழகிய மலரென பூத்துக் குலுங்கித் திரிந்த துர்காவின் திடீர் மரணம், பணக்கார சொந்தங்களால் ஏற்படும் அவமானங்கள், வறுமையினால் ஏற்படும் இயலாமை இவையெல்லாம் அப்புவின் குடும்பத்தை நிச்சிந்தாபுரத்திலிருந்து காசி நகர் நோக்கி விரட்டுகிறது. காசியில் அவர்களின் நிலைமை சீராகும் தருணம் ஹரிஹரனின் எதிர்பாராத மரணம் அப்புவின் வாழ்வை புரட்டிப்போடுகிறது. அவனுக்குப் பிடித்தமான புதர் மண்டிய மூங்கில் காடுகள் காசியில் இல்லை. (22ஆம் பக்கம் பார்க்க)

சூர்யாவின் 'என்.ஜி.கே.' படம் வெளியாகியுள்ளது. அடுத்து கே.வி. ஆனந் இயக்கத்தில் நடித்துள்ள காப்பான் படம் வெளியாகவுள்ளது.

அடுத்து, 'இறுதிச்சுற்று' இயக்குநர் சுதா கெங்காரா இயக்கும் 'சூரரைப் போற்று", படத்தில் சூர்யா நடிக்கவுள்ளார். இதைத் தொடர்ந்து சன் பிக்ஸர்ஸ் தயாரிக்கும் படத்தில் நடிக்கிறார்.



முதலில் இந்தப் படத்தை ஹரி இயக்குவதாக இருந்தது. ஆனால் அது சாத்தியப்படாததால் வேறு இயக்குநர்களிடம் கதை கேட்கிறது நிறுவனம்.

அறிமுகமான நாள் தொடக்கம் இப்போது வரை கவர்ச்சி காட்டாத நடிகைகளில் கீர்த்தி சுரேஷும் ஒருவர்.

இப்போது அவருக்கு வாய்ப்புகள் குறைந்துள்ள நிலையில் கவர்ச்சியாக நடிக்கத் தயாராகியுள்ளார். இதற்காக உடல் எடையைக் குறைத்து மெலிந்துள்ளார்.






அழகான நடிகைகளுக்கு மத்தியில் நிறத்துக்காகவும் புகழ்பெற்றவர் தமன்னா. அவருக்கு அதிக மேக்கப்பும் தேவைப்படுவதுமில்லை.

பல வெற்றிப் படங்களில் நடித்து விட்டாலும், அவரால் நிரந்தர இடத்தை இன்னமும் பிடிக்கமுடியவில்லை. இதனால் இப்போது கவர்ச்சியை மேலும் கூட்டியிருக்கிறார்.

'கத்திச் சண்டை' படத்தில் குட்டிச் சட்டை போட்டு தொடை அழகைக் காட்டியவர். 'தேவி - 2' படத்தில் மார்புக் கச்சையுடன் குளிக்கும் காட்சியில் ரசிகர்களை ஈர்த்துள்ளார்.





ஜெயம் ரவியின் 25 ஆவது படம் விவசாயிகள் பிரச்சினையை மையப்படுத்தி உருவாகிறது. இந்தப் படத்தை அவரது மாமியார் சுஜாதா பெரும் பொருட்செலவில் தயாரிக்கிறார்.

படத்தை, 'ரோமியோ ஜூலியட்', 'போகன்' படங்களை இயக்கிய லட்சுமண் இயக்கவுள்ளார். நாயகியாக நிதி அகர்வால் நடிக்கிறார்.

நாயகியை மையமாகக் கொண்டு உருவாகும் படமான 'மஹா'வில் ஹன்சிகா நடித்து வருகிறார். இது அவரின் 50 ஆவது படம்.

இந்தப் படத்தில் சிம்பு சிறப்புத் தோற்றத்தில் நடிக்கிறார். இதற்காக படப்பிடிப்பில் அண்மையில் கலந்து கொண்டார்.



பிரபல பொலிவூட் நடிகைகள் தமிழிலும் நடிப்பது வழமை. அனுஷ்கா சர்மாவையும் தமிழில் நடிக்க வைக்க சில இயக்குநர்கள் அணுகியுள்ளனர்.

ஹிந்தியில் அவர் நடித்து வெளியான 'பரி' படத்தை தமிழில் மீளுருவாக்க முயற்சிகள் நடக்கின்றன. எனவே இந்தப் படத்தின் மூலம் அனுஷ்கா தமிழில் அறிமுகமாகலாம்.

பிரபல கிரிக்கெட் வீரர் கோலியை மணந்த பிறகு, அனுஷ்காவுக்கு பொலிவூட்டில் மவுசு குறைந்து விட்டதால், அவர் தமிழில் நடிக்க ஆர்வம் காட்டலாம்.

# என் கண்ணெதிரே மருத்துவமனை எரிந்தது...!

## காயப்பட்டவர்கள் சிதறிப் பலியாகினர்...!

**முள்ளிவாய்க்கால்**
**மருத்துவப் போராளி அலன்**

(சென்றவாரத் தொடர்ச்சி)

**விடுதலைப்புலிகளின் மருத்துவப் பிரிவு காயப்பட்ட சிங்கள இராணுவத்தை பாதுகாத்தது பற்றி கூறுங்கள்?**

நிச்சயமாக விடுதலைப் புலிகளின் மருத்துவர்களுக்கு தலைவர் வலியுறுத்துவது இதைத்தான். எதிரி என்றாலும் அவன் நோயாளியாக உங்களிடம் வந்தால் எங்கள் போராளிகளைப் போலவே பாதுகாக்க வேண்டும் என்று. அதைப் போலவே எங்களை கொல்வதற்காக துப்பாக்கியோடு களத்தில் நின்றவர்கள் காயப்பட்டு வந்தபோது அவர்களையும் எம் போராளிகள் போலவே பாதுகாத்தோம்.

இறுதிக் காலங்களில் என்னிடம் 6 சிங்கள இராணுவத்தினர் சிகிச்சை பெற்றார்கள். அதில் இருவர் மேஜர் தர அதிகாரிகளாகவும், ஒருவர் லெப்டினன்ட் தர அதிகாரியாகவும், மிகுதியானவர்கள் கோப்ரல் தர படையினராகவும் இருந்தார்கள். அதை விட இவர்கள் என்னிடம் சிகிச்சைக்காக வந்த போது வயிறு, தலை என்பவற்றில் பெரும் காயங்களுடனே வந்தார்கள். இவர்கள் பூநகரி பிரதேசத்தில் நடந்த சண்டையில் காயமடைந்து காப்பாற்றப்பட்டு கொண்டுவரப்பட்டிருந்தார்கள்.


இவர்களின் சிகிச்சைகளின் பின் அவர்களை பாதுகாக்கும் பிரிவினரால் பொறுப்பெடுக் கப்பட்டிருந்தார்கள். அதில் மூவர் ஐ.சி.ஆர்.சி. ஊடாக சிங்கள அரசிடம் கையளிக்கப்பட்டார்கள். ஏனைய மூவரும் விடுதலை செய்வதற்கான நிர்வாக வேலைகள் நடந்து கொண்டிருந்த காரணத்தால் தனிப்பட்ட முகாம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருந்தார்கள்.

**இவர்கள் மட்டும்தானா இருந்தார்கள்?**

இந்த ஆறு பேரும் என்னிடம் சிகிச்சை பெற்றவர்கள். அதை விட எம் மருத்துவர்கள் பலரி டம் சிகிச்சை பெற்ற பல இராணுவ வீரர்களை நாம் விடுவித்துள்ளோம். அதேநேரம் விடுவிப்பதற்கு தயாராக சிலரையும் சிறைக் கைதிகளாக பலரையும் விட்டுச் சென்ற மக்களின் வாழ்விடங்களில் தங்க வைத்திருந்தோம். எனக்குத் தெரிய பலர் அங்கே இருந்தார்கள்.

**உங்களிடம் மருத்துவ பொருட்கள் அல்லது உபகரணங்கள் போதுமான அளவில் இருந்ததா?**

இல்லை. உணவுப் பொருட்களுக்கு இருந்த தடையைப் போலவே மருந்துப் பொருட்களுக்கும் தடை விதித்திருந்தது சிங்கள அரசு. அதனால் எம்மிடம் மருத்துவப் பொருட்கள் கையிருப்பில்



இல்லை. அதே நேரம் கைவிடப்பட்ட புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் இருந்து நான் மீட்டு வந்த மருந்துப் பொருட்களை சிக்கனமாக பாவித்து வந்ததால் இறுதி வரை கொஞ்சமேனும் இருப்பில் இருந்தது. அதை விட மருத்துவ இருப்பு என்பது அறவே இல்லை.

வலிநிவாரணி, தொற்றுநீக்கிகள் என்று எதுவுமே இல்லை. அதுவும் சிறுவர்களுக்கான தொற்றுநோய்த் தடுப்புக் குளிசைகள் எம்மிடம் கொஞ்சம் கூட இல்லாமல் போயிருந்தது. ஆனால் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் இருந்து எடுத்து வந்த மருந்துகள் எமக்கு பெரிதும் உதவின. அதை விட எலும்புகள் பொருத்துவதற்கா பாவிக்கும் External Fixation கள் கையிருப்பு இல்லாத நிலையில் புதுக்குடியிருப்பு மருத்துவமனையில் இருந்து எடுக்கப்பட்டதால் இறுதி நாட்கள் வரை மிகப் பயனுள்ளதாக இருந்தது.

**சிங்கள அரசின் பொருளாதாரத் தடையால் மக்கள் உணவுக்கு பெரிதும் சிரமப்பட்டிருப்பார்களே?**

நிச்சயமாக, நான் சிறுவயதில் படித்த ஒரு விடயத்தை இந்த சண்டை எனக்கு நினைவூட்டியது என்பதை விட நேரடியாகவும் காட்டியது என்றே கூறலாம். அதாவது பண்டமாற்றுப் பொருளாதாரம் என்று ஒரு விடயத்தை ஆதிகால மக்கள் செய்திருந்தார்கள். அதாவது பணம் என்ற பரிமாற்றுச் சாதனத்தைக் கண்டுபிடிக்க முதல் பொருட்களைக் கொடுத்து பொருட்களை வாங்கும் முறைமை இருந்தது. அவ்வாறான முறைமையையே எம் மக்கள் இறுதியாக கையாண்டார்கள். “ஒரு கிலோ அரிசி தாங்கோ நாங்கள் உங்களுக்கு பங்கர் வெட்டித் தாறம் “ என்று கேட்ட மக்கள்தான் அதிகமாக இருந்தார்கள். உழைப்புக்கு பணம் வாங்க மறுத்தார்கள். பணம் அங்கே பெறுமதியற்ற வெற்றுத் தாளாகவே இருந்தது. ஒரு சோற்றுப் பருக்கைதான் அங்கு பெறுமதியாக காணப்பட்டது. இவ்வாறுதான் மக்கள் வாழ்ந்தார்கள். உண்ண உணவில்லை.

தமிழீழ நிர்வாக சேவை மற்றும் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஆகியவை மக்களுக்காக கஞ்சித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தியதால்தான் பசியில் சாவடைந்த மக்களின் தொகை கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. இல்லை என்றால் பசியில் அங்கிருந்த அனைவருமே இறந்திருப்பார்கள்.

**இறுதி நாட்களில் காயப்பட்டவர்களை எவ்வாறு கையாண்டீர்கள்?**

உண்மையில் மிக இடர் சுமந்த காலம் அது. சண்டை தொடர்ந்து நடந்து நாங்கள் முள்ளிவாய்க்காலை நோக்கி நகர்ந்து வந்துவிட்டோம். நான் வட்டுவாகல் பகுதியில் இருந்த இரண்டு வீடுகளை சத்திரசிகிச்சைக் கூடமாக மாற்றி இருந்தேன். அதனை சுற்றி சிறு கிடங்குகளை பதுங்குகுழி போல உருவாக்கி, மேலே தறப்பாளை கட்டிவிட்டு காயப்பட்ட வர்களை படுக்க வைத்திருந் தோம். இதுதான் அவர்களுக்கான பாதுகாப்பு நடவடிக்கை.

**எவ்வகையான காயங்களை நீங்கள் கையாண்டீர்கள்?**

எல்லா வகையான காயங்களும் வந்தன. நான் இறுதியாக வட்டுவாகலுக்கு மருத்துவமனையை மாற்றுவதற்கு முன்னால் முள்ளிவாய்க்காலில் இருந்த போது அங்கே பொஸ்பரஸ் குண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட காயங்கள் வந்தன. அதை விட இரணைப்பாலையில் இருந்த போதே கொத்துக்குண்டுத் தாக்குதலால் ஏற்பட்ட காயங்கள் வந்திருந்தன. இறுதிக் காலத்தில் கூடுதலாக எல்லாவகையான ஆயுதங்களையும் இராணுவம் பயன்படுத்தி இருந்தது.

**இறுதிக் காலங்களிலும் மருத்துவமனையில் தங்கி நின்றார்களா?**

காயப்பட்டவர்களை கொண்டு வந்து மருத்துவமனையை சுற்றி கிடத்திவிட்டு உறவினர்கள் போய்விடுவார்கள். அதனால் அங்கிருக்கும் காயங்களின் தன்மையை ஆய்வு செய்து நாம் சிகிச்சை வழங்குவோம். உதாரணமாக ஒருவருக்கு கால்களை கழட்டினால் உயிர் தப்ப முடியும் என்றால் உடனடியாக அதை செய்தோம். சிகிச்சை செய்தும் பலனில்லை உயிர் பிரிவது நிச்சயம் எனக் கருதும் காயக்காரர்களை இரத்தத்தை கட்டுப்படுத்தி அவர்களுக்கான முதலுதவிச் சிகிச்சைகளைச் செய்து விட்டு ஏனைய காயக்காரரை கவனிப்போம். வேறு ஒன்றையும் செய்ய முடியாத நிலை.

மிகக் கொடுமையான சம்பவம் ஒன்றை இப்போது பகிர வேண்டும். ஓர் இளைஞன் காயப்பட்டு வந்த போது அவனுக்கு கால் மற்றும் கைகளில் காயம் இருந்தது. அதனால் சத்திரசிகிச்சை செய்து அவரை அதற்குப் பின்னான சிகிச்சைகளுக்காக அருகில் இருந்த மாமரம் ஒன்றுக்கு கீழ் சிறிய மருத்துவ பதுங்கு குழிக்குள் படுக்க வைத்திருந் தேன். அப்போது, திட்டமிட்ட தாக்குதலை மருத்துவமனை மீது சிங்களப் படைகள் செய்தன. அத் தாக்குதலில் 50 இற்கும் மேலான மக்கள் இறந்தனர். அதேநேரம் 6 போராளிகள் வீரச்சாவடைந்தனர். பல மக்கள் மீண்டும் காயமடைந்திருந்தனர். அதில் அவனும் ஒருத்தன்.

(மறுபக்கம் பார்க்க)

அவன் வயிற்றில் காயப்பட்டிருந்தான்.

“டொக்டர் என்னைக் காப்பாத்துங்கோ பிளீஸ்...” என்று கத்திய படி காயப்பட்டிருந்த காலை இழுத்தபடி ஓடி வருகிறான். இரு கைகளும் வயிற்றில் இருந்து வெளியே விழுந்த குடலை விழுந்துவிடாமல் பிடித்தபடி இருக்கின்றன. எனக்கு அக் காட்சியை நினைத்தால் இப் போதும் மனம் ஒரு நிலையில் இருக்காது. அப்போது எங்களின் போராளி மருத்துவரான தணிகை அவர்களும் பணியில் இருந்தார். அதனால் அந்த இளைஞனை உடனடியாக சத்திரசிகிச்சை டுயியசழவழஅல செய்வதற்காக தயார்படுத்தினேன். மருத்துவர் தணிகையுடன் இணைந்து நானும் அந்த இளைஞனுக்கான சத்திரசிகிச்சையை செய்து முடித்தோம். அதே நேரம் அந்த நேரம் அந்த சத்திரசிகிச்சைக்கு இரத்தம் தேவைப்பட்டது. அதை தருவதற்கு அங்கே யாராலும் தயாராக இல்லாத நிலையில் மருத்துவப் போராளி உயர்ச்சியிடம் இருந்து குருதி பெறப்படுகிறது. அக்குருதியை வைத்தே அவ்விளைஞனை காப்பாற்றினோம்.

இதைப் போலவே இன்னும் ஒன்று, சிறு பிள்ளை ஒன்று தலையில் காயப்பட்டபடி என்மருத்துவமனைக்கு கொண்டுவரப்படுகிறாள். அவளைக் கொண்டுவந்தது அவளது பேரன். அவர் வந்து கத்தி அழுதபடி என் பேத்தியை காப்பாற்றுங்கள் என்று கெஞ்சுகிறார். பரிசோதித்த நான் அவளைக் காப்பாற்ற முயற்சி செய்கிறேன். ஆனால் முடியவில்லை. அவள் இறந்துவிட்டதை உறுதிப்படுத்திக் கொண்டு அவளைத் தூக்கி வந்த அந்த ஐயாவிடம் தெரியப் படுத்தலாம் என்று வந்த போது, அவர் அந்த வீட்டு வாசலைக் கடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது சிங்கள இராணுவம் எறிகணைத் தாக்குதல் செய்கிறது. அத் தாக்குதல் நின்ற போது வாசலை எட்டி நோக்குகிறேன். அங்கே அந்த வயதானவர் தலை சிதறி பலியாகி இருந்தார். இவ்வாறு பல கொடுமைகளை எம் மண் சுமந்து நின்றது.

அதை விட கொடுமை என்ன என்றால் என்னிடம் என் குடும்பத் தேவைக்காக இருந்த 2 கிலோ அரிசியை கொடுத்து, மக்களைக் கொண்டு வெட்டிய ஒரு பதுங்குகுழிக்குள் எம் மருத்துவமனையை சுற்றி இறந்த மக்களைப் புதைத்தேன். கடுமையான தாக்குதல்கள் நடத்தப்பட்டதால் மருத்துவ மனையைச் சுற்றிப் பல மக்கள் இறந்திருந்தார்கள். எம்மால் எதையும் செய்ய முடியவில்லை. உடனடியாக அவர்களை அடக்கம் செய்ய வேண்டிய சூழல் அதனால் அவ்வாறான 47 பேரை நாங்கள் அந்த பதுங்குகுழியில் புதைத்தோம். பண்டமாற்று பொருளாதாரத்தை எனக்கு காட்டிய இறுதிப் போர் அன்று கொடுமையான இச்செயலையும் தந்திருந்தது.

**இறுதி வரை போராளிகளின் மனநிலை எவ்வாறு இருந்தது?**

காயப்பட்ட போராளிகள் கூட காயத்தை மாற்றிக் கொண்டு சண்டைக்கு போக வேண்டும் என்ற மனநிலையில் இருந்தார்கள். ஓரிரண்டு பேர் சண்டையைத் தவிர்த்தாலும் அநேகமான போராளிகள் களமுனைக்கு போக வேண்டும் என்பதில் குறியாக இருந்தார்கள்.

**இறுதி நாள் என்ன நடந்தது ?**

16 ஆம் திகதி வரை என் பராமரிப்பில் பல போராளிகளும் அதிகமான மக்களும் இருந்தார்கள். பெரும்பாலும் கால் உடைவுக் காயங்கள் தான் அதிகம். அவ்வாறான நிலையில் அவர்களுக்கு முடிந்தளவு அறிவுறுத்துகிறேன் “அப்பா, அம்மா உறவுகள் யாராவது வந்தால் அவர்களுடன் போகக் கூடியவர்கள் போங்கோ என்று. அப்படி போனவர்கள் ஓரிரண்டு பேர் தான். மிகுதிப் பேர் அங்கேயே இருந்தார்கள்.

இறுதியாக நான் வைத்திருந்த மருத்துவமனையை இராணுவம் சுற்றிவளைத்து விட்டது. அதன் பின் அங்கே எதையும் செய்ய முடியாத சூழல். முடிவெடுக்க முடியவில்லை. என் மனைவியும் மகனும் என்னுடனேயே நிற்கிறார்கள். அவர்களையாவது காப்பாற்ற வேண்டிய சூழல். நான் அவர்களைக் கூட்டிக் கொண்டு போய் என் நண்பனின் குடும்பத்தோடு சேர்த்து விடலாம் என்று வெளிக்கிட்ட போது,

“டொக்டர் நீங்களும் எங்களை விட்டிட்டு போகப் போறீங்களா...” என்று ஒரு தம்பி கேட்டான். என்னால் அவனுக்கு எதை செய்ய முடியும்? அவர்களை எப்படி காப்பாற்ற முடியும்? என்னால் ஒரு முடிவும் எடுக்க முடியவில்லை. அவர்களிடம் மனைவி மகனை விட்டுவிட்டு வருவதாக உறுதி வழங்கி விட்டு வட்டுவாகலை நோக்கி செல்கிறேன். அங்கே நண்பனின் குடும்பத்திடம் என் குடும்பத்தை விட்டுவிட்டு மீண்டும் மருத்துவமனைக்கு வருகிறேன்.

என்னால் அந்த இடத்துக்கு கிட்ட போக முடியவில்லை. அவ்வளவு எறிகணைத் தாக்குதல்கள். எப்படியோ நான் அங்கே போய் சேர்கிறேன். 150-200 மீற்றர் தூரத்தைக் கடப்பதற்கு 200 தடவைக்கு மேல் நிலத்தில் விழுந்து படுத்திருப்பேன் அவ்வளவு தாக்குதல்கள். இவ்வாறு மருத்துவமனைக்குப் போய் சேர்ந்தபோது அப் போராளிகள் மனதில் புது தெம்பு பிறந்திருக்கும் அவர்களுக்காக நான் இருக்கிறேன் என்று நம்பிக்கை எழுந்திருக்கும். அதனால் அந்த கொடுமைக்குள்ளும் புன்னகைத்தார்கள்.

நான் என்னோடு பணியாற்றியவர்களை வெளியேறிச் செல்லுமாறு பணித்தேன். அதன் பின் அப்போராளிகளோடு பேசிக் கொண்டிருந்த தருணம் பின் பகுதியில் இருக்கும் கொட்டிலுக்கு போய் வர வேண்டிய சூழல் வந்தது. அவர்களும் என்னை எதிர்பார்த்திருந்தார்கள். அதனால் அவர்களிடம் சென்று வருவதாக கூறிவிட்டு சென்ற போது ஒரு தம்பி, டொக்டர் எப்பிடியும் ஆமி எங்கள உயிரோட பிடிச்சிடுவான் உங்கட குப்பிய தாங்கோ நான் சாகப் போறன் என்றான். அவனுக்கு என்ன பதில் சொல்வது என்று எனக்கு தெரியவில்லை. அவனிடம் அப்பிடி ஒன்றும் நடக்காது என்று ஆறுதல் சொல்லி விட்டு நகர்கிறேன். அதேவேளை அங்கே இருந்த மக்கள் மிகவும் அச்சத்தில் இருந்ததை நான் உணர்ந்தேன். அவர்கள் ஒவ்வொருவரும் தம்மைக் காப்பாற்றுமாறு கத்தி அழுதது இன்னும் செவிகளில் கேட்கிறது.

நான் என்ன செய்ய முடியும்? எதையும் முடிவெடுக்க முடியாதவனாய் நின்றபோது என்னுடன் பணியாற்றிய ஒரு சகோதரன் தனது குடும்பத்துடன் வந்திருந்தான். அவரைக் கூட்டிக் கொண்டு போய் என் மனைவி, மகனோடு விடலாம் என்று யோசித்து அவர்களை அழைத்துக் கொண்டு சென்ற போது பெரும் தொகையான 60 எம்.எம். எறிகணைகள் எம் மருத்துவமனையை நோக்கி செலுத்தப்பட்டதை பார்த்தேன். அக் குறுகிய இடத்தில் 100-200 க்கும் மேலான எறிகணைகள் வெடித்துச் சிதறின. அத்தனையும் மருத்துவமனை என்று தெரிந்து அடிக்கப்பட்ட எறிகணை என்பது எனக்கு புரிந்து போனது.

தாக்குதல் குறைந்த போது அங்கே செல்ல முனைந்த என்னைத் தடுத்து நிறுத்தினார் மற்றவர். ஆனாலும் நான் காப்பாற்றிய எம் போராளிகள் கண்ணுக்கு முன்னே தவித்துக் கிடக்க என்னால் எதையும் செய்ய முடியாமல் தவித்தேன். அப்போது என் போராளி நண்பன் ஒருவன் அங்கிருந்து தப்பி வந்திருந்தான்.

‘மச்சான் உன்னோட இடத்துக்கு 60எம்.எம்மால பராச் பண்ணி விட்டான். எதுவும் மிஞ்சவில்லை. எல்லாமே சிதறிப் போய்விட்டது. ஒருத்தன் கூட உயிரோட இல்ல. அவன் தெரிஞ்சுதான் அடிச்சிருக்கான்.”

எனக்கு எதையும் செய்ய முடியவில்லையே என்ற ஏமாற்றம் கண்ணுக்கு முன்னால் கொஞ்ச நேரத்துக்கு முதல் கதைத்துவிட்டு வந்த அப்போராளிகளையும் மக்களையும் காப்பாற்ற நாம் போராடிய ஒவ்வொரு விநாடிகளும் இப்படி சிதைந்து போய்விட்டது என்று மனம் உடைந்து போனது. என்னால் அந்த இடத்தை விட்டு வரவும் முடியவில்லை.

மனைவி, மகனை தவிக்க விட்டு இருக்கவும் முடியவில்லை. மன நெகிழ்வோடு நான் இருந்தபோது நண்பனும் மற்ற சகோதரனும் என்னை தம்மோடு வருமாறு கட்டாயப்படுத்தினர். அதற்குமேல் அங்கே ஒன்றும் இல்லை என்றாகிவிட்ட போது நான் எதை செய்யப்போகிறேன் என்ற நினைப்பில் மீண்டும் ஒருமுறை அவ்விடத்தை திரும்பிப் பார்த்தபடி உயிரோடு வந்தும் வலியோடு வாழ்கிறேன்.

---

## இந்திய...

(06ஆம் பக்கம் பார்க்க)

கொலை செய்யப்பட்டுப் புதைக்கப்பட்டார். வட,கிழக்கு மாகாண சபையின் தவிசாளர் ராம், ராஜகாரியர் இச்சம்பவம் தொடர்பாகப் பதிவிட்டுள்ளார். தங்களால் ஏதிலிகளாக்கப்பட்ட மக்களின் தொகையை முதலில் அண்ணளவாகவேனும் ஈ.பி.ஆர்.எல்.எவ். கணக்கிட வேண்டும். தற்போது இந்தியாவின் நலனைக் கருத்தில் கொண்டே ஏதிலிகளை வடக்கில் ஏற்க வேண்டாம் என்கின்றனர். இந்தியர்களை விட இந்தியா குறித்த விசுவாசம் இவர்களுக்குத்தான் அதிகம்.

• • •

ஏதிலிகள் விடயத்தில் இன்னொரு கூற்றும் கவனத்துக்குரியது. யாரிடம் அனுமதி பெற்று வடக்குக்கு இவர்கள் வந்தனர் எனக் கேள்வி எழுப்புகிறார் வடக்கின் அதிகாரத் தரப்பில் உள்ளவர். ஜனாதிபதிக்குக் கூட இந்த விடயம் தெரியாது என்கிறார். ஜனாதிபதிக்குத் தெரியாதவைகளின் பட்டியல் மிக நீண்டது. மகாவலி எல் வலயத்தில் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டமை, அவர்களுக்குக் காணி உறுதி வழவங்கப்பட்டமை, செம்மலை நீராவியடியில் பிள்ளையார் ஆலயம் இருந்தமை, கன்னியாவில் வரலாற்றுப் பெருமை மிக்க பிள்ளையார் ஆலயம் இடிக்கப்பட்டு புத்த விகாரை அமைக்கப்படுவது, கனகராயன் குளத்தில் தனியார் காணியில் படையினர் விகாரை அமைத்தது என இப்பட்டியல் நீள்கிறது.

உயிர்த்த ஞாயிறு அன்று குண்டு வெடிக்கும்வரை அவருக்கு எதுவுமே தெரியாது. எனவே ஜனாதிபதிக்கு தெரிந்தது, தெரியாது எனக் கொடுக்கும் முக்கியத்துவத்தை விட ஏதிலிகளுக்கு எந்தவகையில் உதவலாம் என மனிதாபிமான ரீதியில் சிந்திப்பதே நன்று.

அண்மைக்காலமாக தனியாக நினைவேந்தல் மேற்கொள்வது, வணக்க ஸ்தலங்களில் மணி ஒலிக்க வைப்பது என்று அடிக்கடி அறிவிப்புக்கள் வருகின்றன. சிரித்திரன் ஆசிரியர் சுந்தரின் மொழியில் சொன்னால், ‘எஸ்கிமோக்களுக்கு குளிர்சாதனப் பெட்டி விற்கும் வேலை’, மேற்சொன்ன அறிவிப்புக்களைப் பார்க்கும்போது குழந்தை ம.சண்முகலிங்கத்தின் ‘மண்சுமந்த மேனியர்” நாடகம்தான் நினைவுக்கு வருகிறது. ‘பத்துப் பிள்ளை பெற்றவளுக்கு ஒரு பிள்ளை பெற்றவள் முக்கிக் காட்டினாளாம்’, எனவே ‘நானும்தான் தமிழன்” போன்ற அரசியல் ஸ்டண்ட்களை விட்டுவிட்டு ஏதிலிகளுக்கு மனிதாபிமான ரீதியில் எந்த வகையில் உதவ முடியும் என்று அனைவரும் சிந்தித்து செயலாற்ற வேண்டும்.

■ நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

80

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா

அன்று மட்டும் இடம்பெறவிருந்த கூட்டம் நடைபெற்றிருக்குமானால் போராளிகளின் புலனாய்வுக் கட்டமைப்பு முழுமையாக சிதைந்திருக்கும். ஆனால் சாதாரண மக்கள் அதை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அவர்கள் வழமையான கிபிர், மிக் தாக்குதல்களில் இதுவுமொன்று என்றே எண்ணிக்கொண்டனர்.

பதினைந்து நிமிடங்களில் மக்கள் அங்கு புதினம், பார்க்கக் கூடிவிட்டனர். ஆனால் அன்று மாலை ஒரு பெரும் அதிர்ச்சிச் செய்தி கசியும் என எவருமே எதிர்பார்க்கவில்லை.

புலனாய்வுப் பிரிவினரின் கூட்டம் ஆரம்பிக்கப்படவிருந்தபோது பொறுப்பாளர், பாபுஜியுடன் தொடர்பு கொண்டபோது அவன் மோட்டார் சைக்கிள் பழுதடைந்து விட்டதாகவும் அதை உருட்டிக் கொண்டு வருவதாகவும் தெரிவித்தான். அந்த வார்த்தைகள் பொறுப்பாளரின் சந்தேகத்தை உறுதி செய்துவிட்டன. ஏனெனில் மோட்டார் சைக்கிள் பழுதடைந்தால் அதை அருகில் ஓர் இடத்தில் விட்டுவிட்டு வேறு ஏதாவது ஒரு வழியில் நேரம் தவறாமல் வந்து சேர்வதுதான் வழமையான நடவடிக்கை.

உடனடியாகவே பாபுஜியின் நடமாட்டத்தைக் கண்காணிக்கும்படி அவதானிப்பு மையத்துக்கு தகவல் அனுப்பினார். ஐந்து நிமிடங்களில் பாபுஜி யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருப்பதாகப் பதில் வந்தது. உடனடியாகவே அவனைக் கைது செய்யும்படி கட்டளை அனுப்பினார். அவன் சில நிமிடங்களிலேயே ஆனையிறவில் வைத்துக் கைது செய்யப்பட்டான். ஏற்கனவே வவுனியாவிலிருந்து இரகசியமாக கடத்தி வரப்பட்ட ஒரு அரச புலனாய்வு முகவர் விசாரிக்கப்பட்டதில் பல தகவல்கள் வெளிவந்தன.

அரச புலனாய்வுப் பிரிவால் பயிற்றப்பட்டு வன்னிக்கு அனுப்பப்பட்ட சிலர் போராளிகள், மாவீரர் குடும்பங்களுடன் நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தனர். சிலர் அப்படியான குடும்பங்களில் காதலித்தோ, புறோக்கர்கள் மூலமாகவோ திருமணம் செய்திருந்தனர். அவர்கள் அனைவரும் ஒரு மையத்தைச் சுற்றியே செயற்பட்டனர். ஆனால் அந்த மையம் அவர்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவில்லை. அதன் காரணமாக அந்த முகவர்களில் பலர் பிடிபட்டபோதும் அந்த மூல மையங்களை உடனடியாகக் கண்டுபிடிக்க முடியவில்லை.

மூன்றுமுறிப்பு முகாம் தாக்கப்பட்டபோது அந்த மையம் இயக்கத்தின் மேல் மட்டத்திலும் இயங்குகிறது என்பது உறுதி செய்யப்பட்டது. அம்முகாம் தாக்கப்படப்போவதும் தாக்கப்படும் நாளும் ஒருங்கிணைப்புத்



தளபதி, அரசியல்துறைப் பொறுப்பாளர், சில புலனாய்வுப் பொறுப்பாளர்கள் ஆகியோருக்கு மட்டுமே தெரிந்திருந்தது. தாக்குதலில் ஈடுபட்ட போராளி அணிகளின் பொறுப்பாளர்களுக்குக்கூடக் கடைசி நேரத்திலேயே தெரியப்படுத்தப்பட்டது. எனவே, புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் தனது அணிக்குள்ளேயே பிரச்சினை இருப்பதாக ஊகித்து தனக்கு நம்பிக்கையான சில இடைநிலைப் போராளிகளை கண்காணிப்பில் ஈடுபடுத்தினார்.

சில நடவடிக்கைகள் காரணமாக பாபுஜியின் மேல் சந்தேகம் விழ ஆரம்பித்தது. அதை உறுதி செய்யவே அவர் கனகபுரத்தில் அந்தப் புலனாய்வுத்துறை மேலாளர்களின் கூட்டத்தைக் கூட்டினார். அவர் எதிர்பார்த்ததுபோல பாபுஜியே துரோகி என்பது உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. அவன் தப்பியோடி இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் போக முயன்றபோதே மடக்கிப் பிடிக்கப்பட்டான். பாபுஜி கைது செய்யப்பட்ட பிரச்சினையை இயக்கம் எவ்வளவு மறைக்க முயன்றபோதும் அது எல்லா இடமும் கசிந்து மாலைக்குள் எங்கும் பரவிவிட்டது.

அந்தச் செய்தி சாதாரண மக்களிடம்கூடப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது. மக்கள் ஒருவரில் ஒருவர் சந்தேகப்படவும் ஒவ்வொருவரும் மற்றவர்களைக் கண்காணிக்கும் நிலைமையும் ஏற்பட்டுவிட்டது. ஒவ்வொருவரிடமும் புதிய விழிப்புணர்வு நிலை தோன்றியது.

சாரதா ஒரு போராளி குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுடைய தகப்பன் முருகையா விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர். அவர் இயக்கத்தின் மேல்மட்ட உறுப்பினர்களுடன் மிக நெருக்கமான தொடர்பைக் கொண்டவர். இயக்கப் போராளிகள் விடும் தவறுகளை நேருக்கு நேர் கண்டிக்குமளவுக்கு உரிமை பெற்றிருந்தவர். சாரதா வவுனியாவில் ஓர் அரச காரியாலயத்தில் பணியாற்றி வந்தாள். அவளை ரகு என்ற இளைஞன் விரும்பினான். சாரதா முதலில் அவனை நிராகரித்தபோதிலும் அவனுடைய பண்பும் பழக்க வழக்கமும் அவனின் காதலை ஏற்றுக்கொள்ள வைத்தன. சாரதா தன் தந்தையிடம் விஷயத்தைத் தெரிவித்தபோது, அவர் முற்போக்கான சிந்தனை உள்ளவராகையால் அதை ஆட்சேபிக்கவில்லை.

அவன் பெற்றோரை இழந்தவன் எனக் கூறியிருந்தான். அவன் தன் சகோதரி என்ற ஒரு பெண்ணையும் மைத்துனர் என்று ஒருவரையும் கூட்டி வந்தான். அந்த மைத்துனர் தான் இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவர் எனவும் ரகுவின் குடும்பத்தவர்கள் தொண்டைமானாற்றைச் சேர்ந்தவர்கள் எனவும் பல தலைமுறைகளுக்கு முன்பே அவர்கள் வவுனியாவில் குடியேறிவிட்டதாகவும் தெரிவித்தார். அவர் தான் ஓர் இந்திய வம்சாவழி எனக் கூறியபோது முருகையா அவன் நேர்மையாக உண்மையைச் சொல்வதாகவே நம்பினார்.

திருமண நாளும் குறிக்கப்பட்டுவிட்டது. எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டு பந்தலும் போடப்பட்டுவிட்டது. அன்றுதான் பாபுஜி கைது செய்யப்பட்டான். அடுத்தநாள் மாப்பிள்ளை அழைக்க வவுனியா சென்றவர்கள் வீடு பூட்டிக் கிடப்பதைக் கண்டு திகைத்துப்போய்விட்டனர். அயலில் உள்ளவர்களை விசாரித்தபோது அவர்கள் அன்று அதிகாலை ரயிலில் கொழும்புக்கு போய்விட்ட விஷயம் தெரியவந்தது.

அவன் பணியாற்றும் காரியாலயத்தில் விசாரித்தபோது அவன் முன்பே எல்லோருக்கும் திருமண அழைப்பிதழ் வழங்கியதாகவும் முதல் நாள் மாலை நெருங்கிய உறவினர் ஒருவர் இறந்து விட்டதால் திருமணம் ரத்து செய்யப்பட்டு விட்டதாகக் கடிதம் அனுப்பிவிட்டு எங்கோ போய்விட்டான் எனவும் தெரிவித்தனர்.

மாப்பிள்ளை அழைக்கப் போனவர்கள் அந்தச் செய்தியை வந்து சொன்னபோது முருகையா அதிர்ந்தே போய்விட்டார். எடுத்த காரியம் எதிலுமே தோற்றுப் போகாத அவர் சற்று ஆடித்தான் போய்விட்டார். அவர் மகளிடம் போய் விஷயத்தைச் சொன்ன போது அவள் சில நிமிடங்கள் குலுங்கி குலுங்கி அழுதாள். பின்பு அவள் அழுகையை நிறுத்திவிட, “அப்பா... உண்மையாய் செத்தவீடு தானெண்டால் ஏன் எங்களுக்கு அறிவிக்கேல்லை...?”, எனக் கேட்டாள். அந்தக் கேள்வி முருகையாவையும் சிந்திக்க வைத்து விட்டது. முருகையா வெளியில் வந்து திருமணத்திற்கு வந்தவர்களிடம் மன்னிப்புக் கேட்டுவிட்டு, பந்தலை கலைக்கும்படி சொன்னார்.

சில நாட்களின் பின்பு ரகு, ஓர் அரசபுலனாய்வு முகவர் என்பதும் திட்டமிட்டே சாரதாவைக் காதலிப்பதாக அவன் நடித்தான் என்பதும், பாபுஜி பிடிபட்டதுடன் பயத்தில் கொழும்புக்கு ஓடிவிட்டான் என்பதும் தெரியவந்தது. ஆனால், பாபுஜி பிடிபட்டதும் வெளியிலிருந்து வந்து திருமணம் செய்த மாப்பிள்ளைகளில் பலர் கைது செய்யப்பட்டனர். சிலர் காணாமல்போய் விட்டனர். அவர்களிடமிருந்து வரைபடங்கள் உட்படப் பல ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)



# "ஆனை விலை"யில் வியாபாரம்

ஆனை விலை / குதிரை விலை என்பார்களே...! அது இப்போதுதான் புரிகிறது...!

சிம்பாவேயில் யானைகள் விற்கப்படுகின்றன. அங்குள்ள, காடுகளில் யானைகளின் தொகை அதிகம். எனவே மேலதிகமானவற்றை பிடித்து விற்கிறார்கள். சீனாவுக்கும், துபாய்க்கும் மொத்தம் 100 யானைகளை விற்றுள்ளார்கள். ஆறு வருடங்களில் 2.7 மில்லியன் டொலர் (சுமார் 475 மில்லியன் ரூபா) தொகை செலுத்தியாக வேண்டும்.

சிம்பாவேயின் தேசிய வனவிலங்குப் பூங்காக்களில் பாதுகாப்பாக வளரும் யானைகள் தொகை அதிகமாகி விட்டன. 50,000 இருக்க வேண்டிய இடத்தில் 84,000 இருக்கின்றனவாம். இவை இங்கிருந்து வெளியேறி மக்களின் பகுதிகளில் பயிர்களைச் சேதப்படுத்தி விடுகின்றன. யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான மோதல்களில், இதுவரை 200 உயிர்கள் பலியெடுக்கப்பட்டுள்ளன.

இதனால்தான் யானைகளை வெளிநாடுகளுக்கு விற்பனை செய்ய முடிவு செய்துள்ளார்கள். ஒரு யானையின் விலை, 135,000 - 415,000 வரை விற்பனையாகின்றனவாம்.

# போலிகள் ஜாக்கிரதை




முதலுக்கே மோசம்வரும் நிலை என்று கண்டுவிட்டால், போலிகளை கைவிட்டுவிட்டு, தப்பி விடுகிறார்கள் மெக்ஸிக்கன் நாட்டவர்கள். சமீபத்தைய நாட்களில் வழிப்பறிக் கொள்ளைகளில் மாட்டிக் கொள்ளும் பலர், தங்களிடம் இருப்பதை இழந்தே வீடு திரும்புகிறார்கள். ஆயுதபாணிகளாக வரும் இந்த வழிப்பறிக் கொள்ளைக்காரர்கள் வெறும் கையோடு திரும்பத் தயாராக இருப்ப தில்லை. குறைந்த பட்சம் ஓர் அலைபேசியையாவது எடுத்துச் செல்ல இவர்கள் நினைக்கிறார்கள்.

எனவே, இதற்கு தயாராக விலைகுறைந்த போலி அலைபேசிகளை கைகளில் எடுத்துச் செல்லும் பயணிகள், தயக்கமின்றி அதைக் கொடுத்து தப்பி விடுகிறார்கள். தெருக்களில் சிவப்பு விளக்கு எரியும்போது, மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன. 2019 இன் முதல் 4 மாதங்களில் மாத்திரம் மெக்ஸிக்கோ தலைநகரில் இப்படியான 70 வன்முறை வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளனவாம்.

இப்போது சந்தைகளில்தரமான ஸ்மார்ட்போன் களை ஒத்த போலிகள் 300 தொடக்கம் 500 மெக்ஸிக்கன் பெஸோ( 15-25டொலர்) தொகைக்கு வாங்க முடிவதால், இதை வைத்து தப்பித்து வருகிறார்களாம் பலர்... கையில் உள்ளதையெல்லாம் உடனே தாருங்கள் என்று தெருநடுவில் இவர்கள் மிரட்டும்போது, கையில் உள்ள போனையே இவர்கள் அனேகமாக எதிர்பார்ப்பதுண்டு. ஆனால் போலிகள்

அதிகரிக்கும்போது, இந்தப் "பருப்பு" இனியும் வேகுமா என்பது சந்தேகம்தான்...?

# பெயர்சொல்ல ஓர் அங்கவீனர்

இரு கைகளையும் தோள்மூட்டோடு இல்லாத பெண் ஒருவர் விமான ஓட்டியாக நியமனம் பெற்றுள்ளார். அமெரிக்காவின் அரிஸோனா மாகாணத்தை சேர்ந்த இவர் தான் செஸிக்கா கொக்ஸ். 36 வயதான இவர், பிறக்கும்போதே இரு கைகளும் இன்றியேதான் பிறந்தார். அப்படியானால் எப்படி இவர் விமானத்தை ஓட்டுவார் என்று அதிசயப்படுகிறீர்களா? கால்களால்தான் விமானத்தை ஓட்டுகிறார்.

இது மட்டுமில்லை...!

பியானோ வாசிப்பது, கார் ஓட்டுவது, கராத்தே விளையாடுவது (கறுப்புப் பட்டி பெற்றுள்ளார்), நீருக்குள் சுழியோடுதல் என அனைத்தையும் தனது கால்களைக் கொண்டே அநாயகசமாக செய்து அசத்து கிறார் இந்த அசாதாரண பெண்மணி. எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்தாற்போல, இப்போது ஒற்றை என்ஜினுடன் இயங்கும் விமானத்திற்கு ஒரு பைலட்டாகவும் இவருக்கு அங்கீகாரம் கிடைத்திருக்கின்றது.



தாய்க்கு சாதாரண பிரசவமாக இருந்தும் குழந்தை ஏன் கைகளின்றிப் பிறந்தன என்பது பற்றி அறியாமல், மருத்துவர்கள் இன்னமும குழப்பத்திலேயே உள்ளனராம். மேலும், இவ்வாறான குறைபாடுகளுடன் பிறக்கும் குழந்தைகள் 24 மணி நேரத்தில் இறந்துவிடுவதுண்டு அல்லது இறந்தே பிறப்பதுண்டாம் என்கிறார்கள் மருத்துவர்கள்.

உண்மையில் செஸிக்கா அதிசயமானவள்தான்...!




அழகும் சில சமயங்களில் ஆபத்தானதாகி விடுகிறது. லண்டனில் வசிக்கும் 33வயதான சட்டக்கல்லூரி மாணவி ஒருத்தியும் அப்படித்தான் நினைக்கிறாள்.

பிறப்பால் ரஷ்ய நாட்டவரான இந்த இளம் பெண் இரீனா கோவா தன்னை ஆண்கள் அலட்சியப்படுத்துவதற்கும், பெண்கள் தன்னை நம்பாதிருப்பதற்கும் அழகுதான் காரணமென நினைக்கிறாள். தொழில் அபிவிருத்தி சம்பந்தமாக பல முக்கிய வாடிக்கையாளர்களோடு பணியாற்றியிருக்கும் இரீனா தன் அழகே தனக்குக் குழிபறித்து விட்டதால், இன்னொரு நல்ல தொழிலைத் தேட முடியவில்லை என்கிறாள்.

கல்வித் தகைமையால் எந்த விதத்திலுப் குறைந்தவளல்ல என்று "சன்" பத்திரிகை தன் பேட்டியில் குறிப்பிடுகின்றது. உன் தலைமுடியை மேலும் கறுப்பாக நிறம் மாற்றிக் கொள் என்றுகூட இவளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. தன் கண்கள் கவர்ச்சியாக இருப்பதாகவும், இதழ்கள் போதை ஊட்டுவதாக இருப்பதாகவும் பல முறைப்பாடுகள் சொல்லப்பட்டதாகவும், உடல் கோலத்ை மாற்றினால்தான், பலருள் ஒருவராகப் பழ முடியம் என்று சொல்லப்பட்டதாகவும் இவள் சொல்லிக் குறைப்படுகிறாள்.

இன்னும் சில ஆண்கள் தனக்குப் பக்கத்தில் உட்கார்ந்து பணியாற்றப் பின்வாங்குகிறார்களாம். அலுவலகத்திற் மனைவி வந்து தன் கணவனுக்குப் பக்கத் ஓர் அழகி உட்கார்ந்திருப்பது குடும்பத்ை குலைத்து விடும் என்றுகூட சிலர் அஞ்சுகிறார்களாம். எல்லாவற்றிற்குமே ஒ தீர்வாக, ஒன்லைனில் தன்னுடைய சொந் நிறுவனத்தை ஆரம்பித்து, ரெடிமேட் ஆடைகளை விற்க ஆரம்பித்துள்ளாராம் இந்த அழகி...!

# பணக்காரர்களின் கொழுப்பு...

பணக்காரர்களின் கொழுப்பு இப்படித்தான் வடிகின்றது போலும். ஒரு சவுதிக் குடும்பம் தான் வேலைக்கு வைத்துள்ள ஒரு இளம் பெண்ணை எப்படிக் கொடுமைப்படுத்தியது என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

சவுதியின் தலைநகரான றியாட்டில்தான் இந்தக் கொடுமையான சம்பவம் அரங்கேறி இருக்கின்றது. வீட்டுத் தளபாடத்தை வீட்டு வேலைக்காரி எறிக்கும் வெயிலில் அதிக நேரம் வைத்துவிட்டாள் என்பது குற்றச்சாட்டு. இந்தக் குற்றத்தை வீட்டின் 16 வயதான பிலிப்பைன்ஸ் நாட்டு வேலைக்காரி மீது சுமத்தி, தண்டனையாக, நடுமுற்றத்தின் மரத்தில் கயிற்றால் பிணைத்து, உச்சி வெயிலில் வேகவிட்டுள்ளார்கள்.

இந்தப் பணக்கார வீட்டில் கூடவே வேலை செய்த இன்னொரு பிலிப்பைன்ஸ் பெண், கட்டியிருந்த நண்பியை அலைபேசியில் படமெடுத்து, ஒன்லைனில் பரவிவிட்டு, அதிகாரிகளிடம் உதவி கோரியிருக்கி றாள். வைர லான புகைப் படம் சம்பந்தப் பட்ட அதிகாரி களைச் சென்ற டைந்திருக் கின்றது. இளம் பெண்ணை விடுவிப்ப தற்கான முயற்சிகளும் இடம்பெற்று இப்பொழுது தன் சொந்த மண்ணுக்குத் திரும்பியுள்ளாள்.



எங்கள் சம்பளத்தைக் குறைத்து இப்படி கொடுமைப் படுத்துவதால் தான், நீங்கள் இப்படி வருத்தத்தால் அலைக் கழிக்கப் படுகிறீர்கள். உங்கள் கர்மவினை என்று தன் முதாளியைத் திட்டித் தீர்த்திருக்கிறா பத்திரமாக நாடு திரும்பிய இளம்பெண்.

# ஆரிட்டை சொல்லி அழ?



### இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

## தேரற்றை ஐ.பி.எல். ஆட்டம் இனித்தான் துவங்கப்போகுது? இனி முசுப்பாத்திதான்!

ஞனசார தேரரை வெளியிலை விட்டது நல்லதாப் போச்சுது. உதுதான் சொல்லுறது நல்ல மனுசரை ஒருநாளும் அடைச்சு வைக்கப்பிடாதெண்டு.

இப்ப அவர் வந்தபடியாலை தான் தெரியிது முப்பதாயிரம் தமிழாக்களை முஸ்லிம் மதத்துக்கு மாத்திப்போட்டினம் எண்டும், குருணாகல்லிலை ஏழாயிரம் சிங்கள ஆக்களையும், மத்திய கிழக்குக்கு வேலைக்குப் போன எண்பதாயிரம் சிங்களப் பொம்பிளையளையும் முஸ்லிம் மதத்துக்கு மாத்திப் போட்டினம் எண்டு. தேரர்தான் உந்த விசியத்தைச் சொல்லி இருக்கிறார். புலனாய்வுப் பிரிவு செய்யாத வேலையைத் தேரர் செய்திருக்கிறார். அவரை உள்ளுக்கை வைச்சிருந்ததாலைதான் நாங்கள் கன தகவல்களைப் பெறாமல் கனக்க இழந்திருக்கிறம். இதுதான் எங்கடை கருத்து.

இப்ப பேட்டி ஒண்டிலை தேரரிட்டைக் கேக்கினம் இந்தப் பிரச்சினைக்குப் பிறகு முஸ்லிம் ஆக்கள் தங்களைச் சிங்களப் பெயரிலை அடையாளப்படுத்திறதாக் கதைக்கினம். அதுக்கு நீங்கள் என்ன சொல்லிறியள் எண்டு. அதுக்குத் தேரர் “ஆபத்து வரேக்கை நாய் என்ன செய்யுமெண்டால் ஒழிச்சிருந்து நரியைப் போலை ஊளையிடுமாம். அப்ப எல்லாரும் நினைப்பினம் நரிதான் வந்திட்டுதெண்டு ஓடிவிடுவினமாம். அப்ப நாய்க்கே உந்தப் புத்தி எண்டால் நரிக்கு என்னென்ன மாதிரி மூளை வேலை செய்யும் எண்டு நினைக்கிறியள் எண்டு.. தேரர் விளக்கம் குடுத்திருக்கிறார்.

குண்டு வைக்க முன்னம் அதை நான் பலபேரிட்டை பலதடவை சொல்லி இருக்கிறன். இப்பிடி நான் சொல்லிப்போட்டன் எண்டுதான் என்னைக் கெட்டவன், கூடாதவன் எண்டு பல குற்றச்சாட்டுகளை அடுக்கினவை. இப்ப நான் சொன்னது சரி எண்டு எல்லாருக்கும் தெரியவந்திட்டுதெல்லே! அது எனக்குக் காணும். என்ரை புத்தி சரியா வேலை செய்யிது எண்டதுக்கு இது காணும். அப்ப ஞான சார தேரரைச் சிம்பிளா நினைக்காதையுங்கோ எண்டு சொல்லவாறன். என்ன?

மதம் மாத்திறதெண்டது ஒரு கலாச்சாரச் சீரழிவை ஏற்படுத்திற விளையாட்டு. நாங்கள் எங்கடை கலாசாரத்தை ஒரு பக்கமா வளர்க்கக் கஸ்டப்படுகிறம். முஸ்லிம் ஆக்கள் என்னெண்டால் மற்றப் பக்கமா எங்கடை கலாசாரத்தைச் சீரழிக்கினம். நான் எப்பவும் தேசியத்துக்கான ஆள் எண்டதை மறக்காதையுங்கோ. எனக்கிருக்கிற அந்தத் தேசியக் கடமையை நான் நிறைவேற்றுவன். அதை நான் ஒரு போதும் கைவிடன். இப்படியான சேட்டையளை நான் நிறுத்தாட்டி ஒரு ஈயும் அதைச் செய்ய முன்னுக்கு வராது. விளங்குதோ!

இப்ப பாருங்கோ குருணாகலிலை டாக்குத்தற்றை கதை என்னெண்டு தெரியுந்தானே? அதுக்குத்தான் சொல்லுறது எங்கள் தரவளி இருக்க வேணும் எண்டு. இப்பிடியான சேட்டையள் துவங்கேக்கையே கண்டு பிடிச்சு அதை அப்ப தடுத்திருந்தால் உவ்வளவு மோசமா ஒண்டும் நடந்திருக்காது. கண்ணுக்கை நல்ல ஆனைக்கோட்டை நல்லெண்ணை வாங்கி வைச்சுச் சொட்டுச் சொட்டா விட்டுக் கொண்டிருந்திருப்பன். ஒருத்தரும் என்னை உச்சியிருக்கேலாது!

குண்டு வெடிக்க முன்னம் அரைகுறை மனத்தோடை இருந்த கோத்தாவும் குண்டு வெடிச்சாப் பிறகு தீர்மானிச்சிட்டாராம் · எலக்சன் கேக்கிறதெண்டு. உங்கை ஆமான ஆள் இல்லையாம் தீவிரவாதத்தை அடக்க. இனித்தான் வெண்டு வந்துதான் இஸ்லாமி தீவிரவாத்தை அடக்க வேணுமாம்.

அப்ப ஐபிஎல் ஆட்டம் மாதிரி ஒரு அதிரடி ஆட்டம் ஒண்டு கட்டாயம் இருக்கிதெண்டதுக்குச் சாட்சியா, கனத்த கிரகங்கள் எல்லாம் ஒரு வீட்டுக்கை வருகினம். அதுதான் தேரரைத் துறந்து விட்டாச்சு. கோத்தா ஜனாதிபதி. மஹிந்தா பிரதமர். பசில் ஓல் றவுண்டர். அப்ப உதின்ரை அறிகுறி என்னெண்டால் நல்லது நடக்கப் போகுதெண்டதுதானே.

**- கோளராங்கன்**

---

### பதேர்...

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவன் கற்பனையை தூண்டும் குளம் இல்லை. அவன் மனதுக்கு உற்சாகம் தரும் பண்டகசாலை மைதானம் இல்லை. தூண்டில் போட்டு மீன் பிடிக்கும் பொழுதுகள் இல்லை. வாசிக்க கற்பனா சக்தியை பெருக்கும் புத்தகங்கள் இல்லை. இப்படி எல்லாவற்றையும் இழந்து தவிக்கும் அவன் அவையெல்லாம் மீண்டும் தனக்கு கிடைக்காதா என ஏங்குகிறான். தன் தாய் வேலை செய்யும் வீட்டு எஜமானர்கள் தன்னைத் தவறாக நினைத்து தண்டித்தபோதுகூட அழாத அப்பு தன் வீட்டில் ஜன்னல் முன் நின்று வெளியில் தெரியும் நகரைப் பார்த்து தன் சொந்த மண்ணாக நிச்சிந்தாபுரத்தை நினைத்து தேம்பி அழுகிறான். அந்தத் தருணத்தில் அவனுடன் நாமும் சேர்ந்தல்லாவா அழுகிறோம்.

சமையல் வேலைகளின் இடையே தன் தாயை பய முறுத்தி விளையாடுவது, தன் அக்கா துர்கா சேகரித்துத் தரும் அபூர்வ விளையாட்டுப் பொருட்களை பெட்டியில் வைத்து அதை அடிக்கடி திறந்து பார்ப்பது, அவளுடன் சேர்ந்து வனபோஜன விளையாட்டை விளையாடுவது, தந்தையின் புத்தகப் பெட்டியைத் திறந்து படித்துவிட்டு அவர் அறியாமல் புத்தகத்தை அதிலேயே வைத்துவிடுவது, சோழி விளையாட்டுகளில் கலந்துகொள்ள தன் நண்பர்களுடன் இணக்கமாகச் செல்வது, வீட்டில் கோபித்துக் கொண்டு வீட்டுக்கருகில் உள்ள பாழடைந்த வீட்டின் பக்கச்சுவர் அருகில் மறைந்து கொள்வது, ஆற்றில் வெள்ளப் பெருக்கின்போது துர்காவுடன் இணைந்து மீன் பிடிப்பது, பணக்கார எஜமானர்களின் வீட்டு அறையில் இருந்து ஒலிக்கும் பாடல்களை கேட்க அறையின் வெளியே நின்று காத்திருப்பது என ஒரு சின்னஞ் சிறு பாலகனின் மன உணர்வுகளைச் சிறிதும் மிகைப்படுத்தாமல் யதார்த்தமாக வெளிக் காட்டுகிறார் எழுத்தாளர்.

நாவலின் இறுதியில் சர்வஜயா தன் மகன் அப்புவுடன் தன் ஊரான நிச்சிந்தாபுரத்திற்கே திரும்பிவிட முடிவு செய்வது அப்புவின் வெறுமையான ஆனால் கள்ளமில்லா வாழ்க்கைக்கு உயிரூட்டும் ஒரு முயற்சியாகப் பார்க்கப்படுகிறது. நாவலை வாசிக்கும் நாமும் அப்புவுக்கு அவன் ஆன்மா விரும்பும் உயிரோட்டமான வாழ்க்கை கிடைக்கப்போவதை நினைத்து நிம்மதிப் பெருமூச்சு விடுகிறோம்.

### மீண்டும்...

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றோடு இந்த மிகப்பெரிய அணில் இடப்பெயர்வையும் நாம் பொருத்திப் பார்க்கவேண்டும். காடுகள் இல்லாமல் போகும்போது, அதைத் துண்டாடும்போது அவை இப்படியான விளைவுகளை ஏற்படுத்துவது இயல்புதான் என்று ஜான் கொப்ரோவ்ஸ்கி சொல்வதும் நினைவுகளுக்குள் நிழலாடுகிறது.

ஃப்ளைஜெரின் ஆய்வறிக்கையைப் ப்டித்த பின்னர் கொப்ரோவ்ஸ்கி மேலும் ஆழமாகத் தோண்டிப் பார்த்துள்ளார். அப்போது 19 ஆம் நூற்றாண்டிலும் அணில்களின் இதுபோன்ற மிகப்பெரிய இடப்பெயர்வு நிகழ்வுகள் நடந்திருப்பதைக் கண்டுபிடிக்கிறார். 1857 ஆம் ஆண்டு டெக்சாஸில் நீளமான இலையுதிர் காலம் ஏற்பட்டுப் பழ மரங்கள் உட்படப் பயிர்களையும், விவசாய நிலங்களையும் பாதித்தது. அது இத்தகைய இடப்பெயர்வுக்கு வித்திட்டுள்ளது. ஆயிரக்கணக்கான அணில்கள் கூட்டமாகச் சாலைகளைக் கடந்து சென்றுகொண்டிருந்ததால் தான் குதிரையில் பயணிக்க முடியாமல் முப்பது நிமிடங்கள் காத்திருந்ததாக டெக்சாஸைச் சேர்ந்த ஹென்றி ஹரிஸன் அஸ்கியூ என்பவர் அந்த ஆண்டில் பதிவு செய்திருக்கிறார்.

இதுபோன்ற தகவல்கள் இப்படியொரு நிகழ்வு ஏற்கனவே நடந்திருப்பதை நமக்குக் காட்டும். ஆனால் அப்போதெல்லாம், “அங்கு பாரேன்! எத்தனை அணில்கள் வருகின்றன! எத்தனை அழகாக உள்ளன!” என்ற வியப்போடு எழுதப்பட்ட பதிவுகளே அதிகமிருந்துள்ளன. அவற்றைப் பற்றிய ஆய்வுரீதியிலான தகவல்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். அப்போது எவ்வளவு அணில்கள் இடம் பெயர்ந்தன, எவ்வளவு உணவுத் தட்டுப்பாடு அவற்றுக்கு நிலவியது, ஏன் நிலவியது போன்ற காரணங்கள் தெளிவாகக் கிடைக்கவில்லை. வரலாற்றில் இப்படி நடந்தது சரி, இன்னொரு முறை இதுபோன்ற பெரிய இடப்பெயர்வுகள் நடப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா?

நாம் காடுகளின் நிலவியல் அமைப்பையே மாற்றிக் கொண்டிருக்கிறோம். மிக முக்கியமாகத் துண்டாடிக் கொண்டிருக்கிறோம். குறிப்பாகத் தனிமைப் படுத்தப்பட்ட காடுகளில் வாழும் அணில்கள் மட்டுமின்றி அனைத்து உயிரினங்களும் அவற்றுக்கு அங்கு கிடைக்க வேண்டிய உணவு கிடைக்காமல் போனால் நிச்சயம் வெளியேவரும், அதுவும் மொத்தமாக. அணில்கள் வந்தபோது அதன் அழகை ரசித்துக் கொண்டிருந்ததுபோல் இனி இருக்கமுடியாது. ஏனென்றால், அப்போது போலவே இப்போதும் வருவது அணிலாகத்தான் இருக்குமென்று உறுதியாகச் சொல்லமுடியாது.

# நிலத்துக்கு அடியில் பசுமை பண்ணை: வறட்சியை விரட்டிய பொலிவிய விவசாயிகள்





அல்டிபிலனோ, உலகின் மிகப்பெரிய மற்றும் உயரமான பீட பூமிகளில் ஒன்று. வறட்சியில் இருந்தும், திடீர் வெள்ளத்தில் இருந்தும், அதிகரிக்கும் வெப்ப நிலையில் இருந்தும் தங்களது பயிர்களைக் காப்பதற்காக பொலிவிய நாட்டு விவசாயிகள் பூமிக்கு அடியில் விவசாயம் செய்கின்றனர்.

காலநிலை மாற்றத்திற்குக் குறைந்தபட்சம் பொறுப்புள்ள நாடுகளில் ஒன்றாக பொலிவியா இருந்தாலும், காலநிலை மாற்றத்தின் விளைவுகளை அதிகளவில் பாதிக்கப்படுகின்றது. கிட்டதட்ட 60வீத பொலிவிய விவசாயிகள் அல்டிபிலனோ பீடபூமியில் வாழ்கின்றனர். இப்பகுதி வறட்சி, உறைபனி, அதிக காற்று மற்றும் கதிர்வீச்சு ஆகியவற்றுக்குப் பெயர் போனது. இங்கு, பாரம்பரிய விவசாய முறையான நிலத்தில் விவசாயம் செய்தால், அரிதான மழை மற்றும் மண் அரிப்பினால் பயிர்கள் பாதிக்கப்படுகின்றன.

தங்கள் குடும்பம் மற்றும் கால்நடைகளுக்கு உணவு பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, சில பொலிவிய விவசாயிகள் நிலத்துக்கு அடியில் பசுமை வயல்களை உருவாக்கியுள்ளனர். இந்த வகை நிலத்துக்கு அடியில் உள்ள வயல்களை 'வலிபினிஸ்' என உள்ளூார் மக்கள் அழைக்கின்றனர். இந்த வலிபினிஸ் ில் சில சிறப்பு அம்சங்கள் உள்ளன. இதன் மேற்கூரை மட்டும் வெளியே தெரிகின்றது. ஆனால், வறண்ட பூமியில் இருந்து பிரித்து அறியமுடியாதபடி இந்த வயல்கள் உள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு தனது வலிபினிஸை உருவாக்கிய விவசாயி கேப்ரியல், இந்த முறை விலை மலிவானதாகவும், எளிதாகவும் உள்ளதாக கூறுகிறார். பணத்தைச் சேமிக்கவும், தனது ஐந்து குழந்தைகளுக்கு உணவளிக்கவும் இது உதவுவதாக அவர் கூறுகிறார்.

'நாங்கள் சந்தையில் இருந்து காய்கறிகளை வாங்குவதில்லை. நாங்களே காய்கறிகளை விளைவிக்கிறோம்" என்கிறார் கேப்ரியல். அதிகரிக்கும் வெப்பநிலையாலும், ஒழுங்கற்ற மழையாலும், வெளிப்புறத்தில்(நிலத்தில்) விவசாயம் செய்வது சாத்தியமற்றது என்கிறார் அவர்.

வெளியே என்ன வெப்பநிலை இருந்தாலும், நிலத்துக்கு அடியில் அமைக்கப்பட்டிருக்கும் வலிபினிஸ் நிலையான நுண் தட்பவெப்பநிலையை வைத்திருக்கும். இது இப்பகுதியின் பண்டைய விவசாய முறை அல்ல. இந்த தொழில்நுட்பம் சுவிற்சர்லாந்தைச் சேர்ந்த தன்னார்வலர் பீற்றர் ஐசல்லி என்பவரால் 25 ஆண்டுகளுக்கு முன்பு உருவாக்கப்பட்டது.

கிராமப்புற மக்களுக்கு உணவு பாதுகாப்பை உறுதிப்படுத்தும் புதிய தொழில்நுட்பங்களை உருவாக்குவதற்காக பீற்றரின் திட்டத்திற்கு ஐரோப்பிய மேம்பாட்டு நிதியகம் நிதியளித்தது. முழுமையாக செயல்படும் ஒரு நிலத்தடி பண்ணையை பீற்றர் உருவாக்கினார். ஆனால், பீற்றரின் சோதனை பண்ணைக் கைவிடப்பட்டது.


இந்நிலையில், தொழிலதிபர் மைக்கல் ஜெமியோ கார் இப்பகுதி வழியாகச் சென்றபோது, அவரது கார் பழுதானது. உதவி தேடி கைவிடப்பட்ட தோற்றமுள்ள ஒரு பண்ணை வீட்டுக்கு மைக்கேல் சென்றார். 'விற்பனைக்கு" என்று எழுதப்பட்ட ஒரு பலகை மட்டுமே பண்ணை வீட்டின் வெளியே இருந்தது. இது அவருக்கு மற்றும் அவரது குடும்பத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க பயணத்தின் தொடக்கமாக இருந்தது.


விவசாயம் குறித்து எதுவும் அறியாத மைக்கல், தொலைதூர பகுதியான எல் அல்டோவில் பண்ணையை வாங்க முடிவு செய்தார். தற்போது 18 வலிபினிஸ் உட்பட, பல பண்ணைகளை இங்கு நிர்வகித்து வருகிறார் மைக்கல். இவருடன் பல உள்ளூர் விவசாயிகளும், எந்தக் காலநிலையிலும் பழங்கள், காய்கறிகள் மற்றும் சாலட் இலைகளை மிக அதிக அளவில் உற்பத்தி செய்கின்றனர்.

வலிபினிஸை அமைப்பது எப்படி?

ஒரு மீற்றர் ஆழத்திற்குத் தோண்ட வேண்டும். வடிகட்டுவதற்காகக் கற்களை நிரப்ப வேண்டும். பண்ணையைச் சுற்றி நான்கு செங்கல் சுவர்களையும், ஒரு கதவையும், காற்றோட்டத்திற்கு ஒரு யன்னலையும் அமைக்க வேண்டும். 30 பாகைக்கு ஒரு கூரை அமைக்க வேண்டும். அதற்கு மேலே, நாள் முழுவதும் சூரிய ஒளியை உறிஞ்சுவதற்கு கிழக்குத் திசையைப் பார்த்தால்போல உயரமான சுவரை அமைக்க வேண்டும்.

வழக்கமான பசுமை பண்ணைகளுடன் ஒப்பிடுகையில், வல்பினிஸ் மலிவான மற்றும் மிகவும் பயனுள்ள பண்ணையாக உள்ளது. ஆனால், இந்தப் பண்ணைகளை நீண்ட கால திட்டமாகச் செயல்படுத்த வேண்டும். வல்பினிஸ் பண்ணை குறைந்தளவு தண்ணீரில் செயல்படக்கூடியது.







# சந்திப்பு

கிரிக்கெட் உலகின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான விராத் கோலியும் உதைபந்தாட்ட உலகின் நட்சத்திர வீரர்களில் ஒருவரான இங்கிலாந்தின் ஹரி கேனும் கடந்த வெள்ளிக்கிழமை முதன்முறையாக லண்டனில் நேரில் சந்தித்துள்ளனர். 2018ஆம் ஆண்டு ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்து 28 வருடங்களின் பின்னர் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறி இருந்தது.

அதில் தோல்வி அடைந்தாலும் ஹரி கேனே அதிக கோல்கள் அடித்ததற்கான தங்கக் காலணி விருதை வென்றிருந்தார். அந்தச் சந்தர்ப்பத்தில் ருவிற்றர் வலைத்தளத்தில் விராத் கோலி அவருக்குத் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தார். இதன் மூலமே இவர்களுக்கிடையிலான நட்பு ஆரம்பித்தாலும் சென்றவாரம் வரை ஒருவரையொருவர் நேரடியாகச் சந்திக்கவில்லை.

இந்நிலையில் கடந்த சனிக்கிழமை நியூசிலாந்துடனான பயிற்சிப் போட்டிக்காக இந்திய அணி லண்டனுக்கு வருகை தந்தபோதே லோர்ட்ஸ் மைதானத்தில் இருவரும் சந்தித்துள்ளனர். இது குறித்து ஹரிகேன் தனது ருவிற்றர் வலைத்தளத்தில் 'கடந்த இரண்டு வருடங்களில் வலைத்தளங்களின் ஊடாகச் சில கருத்துக்களைப் பகிர்ந்திருந்தாலும் இறுதியாகப் பிரபலமான பையனும் சிறந்த விளையாட்டு வீரருமான விராத் கோலியை இன்று சந்தித்தேன்' எனக் குறிப்பிட்டு சந்தித்த போது எடுத்த செல்பியையும் பகிர்ந்துள்ளார்.

# 'சேர்' பட்டம்

இங்கிலாந்து ரென்னிஸ் வீரரான அண்டி முரே 'சேர்' பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார். 2016ஆம் ஆண்டு புத்தாண்டு தினத்தில் ராணி எலிசபெத்தால் அறிவிக்கப்பட்ட கௌரவம் பெறுவோர் பட்டியலில் அண்டி முரேயின் பெயரும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் இரண்டு வாரங்களுக்கு முன்னதாக பக்கிங்ஹாம் அரண்மனையில் நடைபெற்ற விழாவிலேயே அவர் கௌரவிக்கப்பட்டுள்ளார். அண்டி முரே யுனிசெவ்வின் ஐக்கிய ராச்சியத் தூது வராக விளங்கி வருவதனால் அவரது தொண்டு நிறுவன சேவைகளையும் ரென்னிஸ் விளையாட்டுக்கு அவர் ஆற்றிய பங்களிப்பையும் கருத்திற் கொண்டே 'சேர்' பட்டம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் இளவரசர் சாள்ஸ் 'சேர்' பட்டத்துக்குரிய கௌரவத்தை அண்டி முரேக்கு வழங்கியிருந்தார். இது குறித்து அண்டி முரே 'இந்த விருது கிடைத்ததையிட்டுப் பெருமையடைகின்றேன். எனது குடும்பத்துடன் செலவழிக்க ஒரு 'நல்லநாள்' எனக் குறிப்பிட்டுள்ளார். மூன்று கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை



வென்ற அண்டி முரே இடுப்புப் பகுதியில் மேற்கொண்ட சத்திர சிகிச்சையால் தற்போது போட்டிகளில் இருந்து விலகியிருந்தாலும் அடுத்த மாதம் நடைபெறவுள்ள விம்பிள்டன் தொடரில் விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# வெற்றிகரமான முயற்சி




கடந்த வருடம் ரஷ்யாவில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் நடுவர்களின் முடிவை மறுபரிசீலனை செய்யும் தொழில்நுட்பம் (Video Assistant Referee) முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது. நேரவிரயம் மற்றும் முடிவுகளின் துல்லியத்தன்மை என்பவை குறித்து சில விமர்சனங்கள் எழுந்தாலும் அதனால் கிடைத்த அனுகூலங்களும் அதிகமே.

சர்வதேச ரீதியில் பல நாடுகளும் இத்தொழில்நுட்பத்தை நடைமுறைப்படுத்த அக்கறை காட்டாத போதிலும் உதைபந்தாட்ட லீக் தொடர்களில் அவற்றைப் பயன்படுத்த வேண்டிய தேவை தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருந்தது. அந்தவகையில் நடைபெற்று முடிந்த ஸ்பெயினின் லாலிகா லீக் தொடரில் இத்தொழில்நுட்பம் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இதுகுறித்து தற்போது ஸ்பெயின் நடுவர் குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் 'இம்முறை அறிமுகப்படுத்தப்பட்ட இத்தொழில்நுட்பம் விளையாட்டின் அனைத்து அம்சங்களிலும் சாதகமான பலனைத் தந்துள்ளது' எனக் குறிப்பிட்டுள்ளது. இந்தப்பருவகாலத்தில் விளையாடிய 380 போட்டிகளில் மொத்தம் 4,293 தடவைகள் இத்தொழில்நுட்பம் பரிசோதிக்கப்பட்டுள்ளது.

அதில் 114 தடவைகள் முடிவுகள் மாற்றப்பட்டுள்ளன. குறிப்பாக 7 சிவப்பு அட்டைகள் வழங்க வேண்டிய சந்தர்ப்பத்திலும் 60 கோல்கள் வழங்க வேண்டிய சந்தர்ப்பத்திலும் மைதான நடுவர் தவறிய பொழுது இத்தொழில்நுட்பத்தின் மூலம் அவை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மீண்டும் இணைப்பு

பாகிஸ்தான் அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளரான சக்லைன் முஸ்ராக் இங்கிலாந்து அணியின் சுழற்பந்து பந்துவீச்சு ஆலோசகராக 2017ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டிருந்தார். அவரது இரண்டு வருட ஒப்பந்தம் இந்த வருட முற்பகுதியில் முடிவடைந்திருந்தது. இந்நிலையில் கடந்தவாரம் சக்லின் முஸ்ராக்கை உலகக் கிண்ணப் போட்டிகளைக் கருத்திற்கொண்டு இங்கிலாந்து கிரிக்கெட் சபை குறுகிய காலத்திற்கு சுழற்பந்துவீச்சு ஆலோசகராக மீண்டும் பணிபுரிய கோரிக்கை விடுத்தது.



இதையடுத்து உலகக் கிண்ணத் தொடரில் இரண்டு வாரங்களுக்கு இங்கிலாந்து அணியினருக்கு பயிற்சியளிக்கவும் தேவைப்பட்டால் அவ்வப்போது ஆலோசனை அளிக்கவும் அவர் சம்மதம் தெரிவித்துள்ளார். இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சக்லைன் முஸ்ராக் 'நான் கடந்த வருடங்களில் இதே இங்கிலாந்து வீரர்களுடன் பணி புரிந்ததனால் அவர்கள் குறித்து நன்றாக அறிந்துள்ளேன். உலகக் கிண்ணம் மிகப் பெரிய தொடராகும். அதில் என்னால் முடிந்தளவுக்கு உதவி புரிவேன்', எனக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது 42 வயதான சக்லைன் முஸ்ராக் உலகக்கிண்ணத் தொடரில் 14 போட்டிகளில் 23 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதோடு 1999 உலகக் கிண்ணத்தில் சிம்பாப்வேக்கு எதிரான போட்டியில் ஹட்ரிக் சாதனை புரிந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# பயிற்சியாளர் கற்கைநெறி

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி ஓய்வு பெற்ற வீரர்களில் சிலர் அதன் பின்னர் பயிற்சியாளர்களாகவும் வர்ணனையாளர்களாகவும் தமது இரண்டாவது இனிங்ஸைத் தொடங்குவது வழக்கமானதே. அந்த வகையில் கடந்த வாரம் லாகூரின் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் நடைபெற்ற 4 நாள் லெவல் 2 பயிற்சியாளர் கற்கைநெறியில் மிஸ்பா உல் ஹக், சயீட் அஜ்மல், அஹமட் ஷெஹாட், உமர் குல், சல்மான் பட் உட்பட 13 முன்னாள் பாகிஸ்தான் வீரர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

இந்தக் கற்கைநெறியில் கிரிக்கெட்டில் பயோமெக்கானிசத்தின் பயன்பாடு மற்றும் தாக்கங்கள், துடுப்பாட்டம்,பந்துவீச்சு, களத்தடுப்பு என்பவற்றில் திறன்களை எவ்வாறு வளர்த்தெடுத்தல், வீடியோ பகுப்பாய்வு தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இது குறித்து மிஸ்பா உல் ஹக் 'பயிற்சியும் விளையாட்டும் வெவ்வேறான விடயங்கள். அதிலும்



பயிற்சியாளரதும் வீரரதும் மனநிலை முற்றிலும் மாறுபட்டவை. அணுகுமுறை வித்தியாசமானவை. அதனை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்' எனக்கூறியுள்ளார். அதுபோல தேசிய கிரிக்கெட் அக்கடமியின் தலைவரான முடாசர் நசார் 'பாகிஸ்தான் கிரிக்கெட்டுக்கு இதுவொரு நல்ல செய்தி. முன்னாள் சர்வதேச வீரர்கள் எதிர்காலத்தில் பயிற்சியாளர் பதவிகளின் ஊடாக நல்லதொரு சேவையை ஆற்றவுள்ளார்கள். பயிற்சியாளர் கற்கைநெறியின் முக்கியத்துவத்தை உணர்ந்து பல வீரர்கள் வருகை தந்தது மகிழ்ச்சியளிக்கிறது' எனக்கூறியுள்ளார்.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 01.06.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.